# திருமறைத்தீபம்

BIBLE LAMP

மலர் 5 ஜூலை - செப்டெம்பர் 1999 இதழ் 3



# திருமறைத்தீபம்

**Issue No. 3 of 1999**

**ISBN 1173-7255**


காலாண்டுக்கொருமுறை வெளிவரும் திருமறைத்தீபம் சவரின் கிறேஸ் வெளியீடுகளினால் வெளியிடப்படுகின்றது. வேதசத்தியங்களை எடுத்துரைத்து கிருபையின் தேவனை மகிமைப்படுத்துவதே பத்திரிகையின் தலையாய நோக்கம்.


பத்திரிகையின் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக்கூடாது.

வருட சந்தா: நியூ. $16.00


**ஆசிரியர்: ஆர். பாலா**
**Editor:** R. Bala
**Publishers:** Sovereign Grace Publications
**Address:** Bible Lamp
P. O. Box 62 159
Sylvia Park
Auckland 1006
New Zealand
**Telphone:** 64 9 272 8061
**Fax:** 64 9 272 8032
**email:** bala@ihug.co.nz
**Web site:** www.biblelamp.org


**கொள்கைகளையும், கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கல் என்றுதான் கூற வேண்டும்.**


*- சி. எச். ஸ்பர்ஜன் -*
*(1834-1892)*



# ஆசிரியரிட மிருந்து . . .

கிறிஸ்தவ குடும்பம் சம்பந்தமான சில ஆக்கங்களை இவ்விதழில் தந்துள்ளோம். தமிழ்க் கிறிஸ்தவ குடும்பங்கள் பல பிரச்சனைகளை எதிர்நோக்கி நிற்கும் இந்நாட்களில் இவ்வாக்கங்கள் பலருக்கும் துணைபுரியுமென்று நம்புகிறோம். குடும்பம் இன்று சந்திக்கும் பிரச்சனைகளை நுனிப்புல் மேய்வது போல் மேலெழுந்தவாரியாகப் பார்க்காது, அதனை ஆழமாக ஆராய்ந்து உண்மைக்காரணங்களை சரிவர உணர்ந்து, அவற்றிற்கு வேதபூர்வமான விமோசனம்காண வேண்டியது ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பத்தினதும் கடமை. இதனையே இவ்வாக்கங்கள் கருத்தில்கொண்டு ஆராய்கின்றன. குடும்பம் ஒரு ஆலயம் இவ்விதழில் இருந்து, தொடராக மலர்ந்து கிறிஸ்தவ குடும்பத்தின் பல அம்சங்களையும் ஆராயவிருக்கிறது. குடும்ப ஆராதனை இல்லாத குடும்பங்கள் கிறிஸ்தவ குடும்பமாக அமைந்து தேவாசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது. குடும்ப ஆராதனை இன்று ஒவ்வொரு குடும்பத்திற்கும் அவசியம். ஜே. சி. ரைலின் சிறந்த பிள்ளை வளர்ப்பு நூல் பற்றி எழுதியிருக்கிறோம். அது அனைவரும் வாசிக்க வேண்டிய அருமையான நூல். ஆகவே, மொத்தத்தில் இவ்விதழ் ஒரு குடும்பமலராக மலர்ந்திருக்கிறது.

சீர்திருத்தக் கிறிஸ்தவத்தில் நாட்டமுள்ளவர்கள் குடும்ப வாழ்க்கையில் அக்கறையற்று இருக்க முடியாது. சீர்திருத்தவாதிகளும், பியூரிட்டன் பிதாக்களும் குடும்ப வாழ்க்கைபற்றிப்போதித்து எழுதி வந்தவர்களில் முதலிடம் பெறுகிறார்கள். சிறந்த கிறிஸ்தவத்தை உலகில் நிலை நாட்டவும், சிறப்பான சபைகள் நாடெங்கும் தோன்றவும், சீரான குடும்பங்களின் அவசியத்தைப்பற்றி அவர்களைப்போல் போதித்தவர்கள், எழுதியவர்கள் கிறிஸ்தவ உலகில் இல்லை. இதுபற்றிய அவர்களுடைய போதனைகள் சுத்தமாக வேதத்தை மட்டுமே தழுவி நிற்கின்றன. அதற்கு அவர்கள் வழிவந்த ரைலின் “சிறந்த பிள்ளை வளர்ப்பு” ஓர் எடுத்துக்காட்டு. இவ்விதழின் படைப்புக்களைப் பல நாடுகளிலும் உள்ள தமிழ் வாசகர்கள் வாசிப்பதால், குடும்ப வாழ்க்கைபற்றிய உங்களுடைய எண்ணங்களையும், நீங்கள் சந்திக்கும் பிரச்சனைகளை யும் எம்மோடு பகிர்ந்து கொண்டால், இனிவரப்போகும் தொடர்களில் அவற்றையும் கருத்தில் கொண்டு ஆராய எமக்கு உதவி புரிந்ததாக அமையும்.



*இன்று சிதைந்து, சீரழிந்து கொண்டிருக்கும் குடும்பத்தைப் பிடித்துள்ள சாபக்கேட்டிலிருந்து அதை விடுவிப்பதெப்படி? இதற்கான வேதபூர்வமான விளக்கத்தை இத்தொடர் அளிக்கிறது.*

# குடும்பம் ஒரு ஆலயம்

குடும்பம் ஒரு ஆலயம் என்று கூறி குடும்பத்தை ஆலயத்திற்கு ஒப்பிட்டு நமது பெரியோர்கள் பேசியுள்ளார்கள். தேவனை அறியாத மக்கள் மத்தியிலும் குடும்பத்தின் பெருமை உணரப்பட்டு அதற்கு எப்போதுமே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. சங்ககாலத் தமிழ் இலக்கியங்களிலும் குடும்பத்தின் பெருமையைப் பற்றி வாசிக்கலாம். வள்ளுவர்கூட தன்நூலில் அதற்குப் பல அதிகாரங்களை ஒதுக்கியுள்ளார். இருந்த போதும், வேதம் மட்டுமே குடும்பம் என்றால் என்ன? அது எப்படி இருக்க வேண்டும்? என்று அதிகாரத்துடன் கூறக்கூடிய உலகிலுள்ள ஒரே நூலாக இருக்கின்றது. தேவனை அறியாத மனிதர்களுக்கும் குடும்பத்தைப்பற்றிய அறிவைத் தந்துள்ள ஒரே நூல் வேதமே.

இன்று பல நாடுகளிலும் தமிழ் மக்கள் மத்தியில் குடும்பத்திற்கு பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. மேலை நாடுகளில் வாழும் தமிழர்கள் மத்தியில் பணமோகமும், வாழ்க்கையில் அந்தஸ்து மோகமும், கலாச்சார பாதிப்பால் ஏற்பட்டுள்ள சுதந்திர வேட்கையும் பல குடும்பங்களைப் பாதித்து அழித்து வருகின்றன. தொட்டியில் இருந்து வெளியில் விழுந்த மீன் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து உயிருக்கு மன்றாடுவது போன்ற நிலையிலேயே பல தமிழ்க் குடும்பங்கள் இன்று வாழ்கின்றன.

கணவனுக்கும் மனைவிக்கும் மத்தியில் ஏற்பட்டுள்ள பிரிவினை மட்டுமல்லாது, பிள்ளைகளும் கலாச்சாரத்தாலும், குடும்பத்தின் நிலைமையாலும் பாதிக்கப்பட்டு கொஞ்ச நஞ்சம் இருந்த ஆன்மீக உணர்வையும் இழந்து கொண்டிருக்கின்றனர்.

மேலை நாடுகளில்தான் இப்படியென்றால் தமிழர்கள் பெருமளவில் வாழும் அவர்களது சொந்த நாடுகளில் குடும்பத்தின் நிலமை என்ன? இன்று தமிழ்நாட்டில் டெலிவிஷனாலும், வீடியோக்களாலும் பாதிக்கப்படாத குடும்பங்களே இல்லை. நமது கலாச்சாரத்தையும், பழக்க வழக்கங்களையும் சிதரடித்து அந்நிய மோகத்தையும், ஆடம்பரத்தில் ஆசையையும் ஏற்படுத்தி குடும்பங்களை சீரழித்துக் கொண்டிருக்கிறது டெலிவிஷன். ஹொலிவுட் படங்களைப்பற்றிப் பேசுவதிலும், மைக்கல் ஜெக்சனைப்போல் நடப்பதிலும் இன்பம் காண்கிறான் நமது இளந்தமிழ்ச்சிறுவன். கணவனையும், மனைவியையும் சேலை மாற்றுவதுபோல் மாற்றி இன்பம் காணும் மேலைநாட்டுக் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் டெலிவிசன் சோப்புக்கள் நமது தமிழ்ப் பண்பாட்டை வேகமாகவே அரித்துக் கொண்டிருக்கின்றன. கிறிஸ்தவர்கள் என்று தம்மை அழைத்துக் கொள்ளும் எத்தனையோ குடும்பங்களும் சிந்தனைக்குத் தூக்க மாத்திரை கொடுத்துவிட்டு குடும்பமாக இத்தகைய கீழ்த்தரமான டெலிவிஷன் காட்சிகளை கண்டுகளித்துக் கொண்டிருக்கிறார்கள். கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும், பெற்றோர் பிள்ளைகளுக்கும் கொடுக்க வேண்டிய நேரத்தைக்கொடுக்காமல், வேலை, வேலை என்று அலைந்து ஒருவரையொருவர் பார்க்கவும் நேரமின்றி, குடும்ப ஜெபத்தையும் குப்பையில் எறிந்துவிட்டு கூண்டோடு அநேகர் சீரழிந்து கொண்டிருக்கிறார்கள். வேலை நிமித்தம் கணவன் வெளிநாட்டிலும், மனைவி சொந்த ஊரிலுமாக பிரிந்து வாழ்ந்து குடும்ப வாழ்க்கைக்கு ஆபத்தைத்தேடிக் கொண்டிருப்பவர்கள் அநேகர்.

நிலைமை இப்படி இருக்கும்போது குடும்பம் புனிதமான ஒரு கோவிலாவதெப்படி? பிள்ளைகள் சரியாக வளர்வதெப்படி? தமிழினத்தைப் பிடித்துள்ள இச்சாபக்கேட்டிலிருந்து நமது குடும்பங்கள் விடுபடுவதெப்படி? குடும்பம் தேவனை ஆராதித்து அவர் வழிப்படி நடப்பதெப்படி? இதற்கான பதிலை நாம் அறிந்து கொள்ளவேண்டியது அவசியம். ஆனால், அதற்கான பதிலை நாம் நவீன உளவியல் வல்லுனர்களின் (Psychologist) அணுகுமுறையைப் பயன்படுத்தியோ அல்லது மனிதநலவாதிகளின் (Humanist) அணுகுமுறையைப் பயன்படுத்தியோ கொடுக்கப் போவதில்லை.

இன்று குடும்பவாழ்க்கையைப்பற்றி எழுதி வரும் சில கிறிஸ்தவர்கள் இத்தகைய அணுகுமுறையையே பயன்படுத்துகிறார்கள். உதாரணத்திற்கு ஜேம்ஸ் டொப்சனைக் (James Dobson) கூறலாம். இவரது நூல்களில் சில நல்ல விடயங்கள் இருந்தாலும் அவற்றிற்காக அவரது தவறான அணுகுமுறைகளை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது (இவரது போதனைகள்பற்றி 21 ஆம் பக்கத்தில் வாசிக்கலாம்). நவீன உளவியல் ரீதியிலான வழிமுறைகளைப்பின்பற்றி குடும்பவாழ்க்கை நடத்த முயல்வதும், அதன் பிரச்சனைகளைத் தீர்க்கப் பார்ப்பது வேதத்திற்கு முரணான செயலாகும். ஆகவே, தேவனை விசுவாசிப்பவர்கள் அவர் தந்துள்ள வேதத்தைப்பயன்படுத்தியே மானுடபிரச்சனைகளை ஆராய வேண்டும்; அவற்றிற்கு வழிகாண முயல வேண்டும்.

உலகில் ஆணையும், பெண்ணையும் உருவாக்கி குடும்பத்தை ஏற்படுத்தியவர் தேவனே. மனிதனோ, குடும்பமோ தானாக ஒருபோதும் தோன்றிவிடவில்லை. ஆதாமும், ஏவாளும் குடும்பமாக தன்னை ஆராதித்து தன் வழியிலேயே வாழ வேண்டும் என்று விதித்தவரும் தேவனே. தேவனை அறியாத உலக மக்களனைவரும் அவருடைய விதிகளின்படியே வாழக் கடமைப்பட்டுள்ளார்கள் என்று வேதம் போதிக்கின்றது. குடும்பத்தை உலகில் உருவாக்கிய தேவன் அக்குடும்பங்கள் வழி தவறிப் போய்விடக்கூடாதென்பதற்காக, அவர்கள் கடைப்பிடித்துவாழ தனது கட்டளைகளையும் தந்துள்ளார். தேவனின் கட்டளைகளைப் பின்பற்றி வாழ்ந்து வாழ்க்கையில் நன்மைகளையே அனுபவித்திருக்க வேண்டிய குடும்பம் ஏன் தீய வழியை நாடியது?

**கணவன், மனைவி உறவு சரியில்லாமல் இருப்பதற்கும், பெற்றோர்கள் பிள்ளை வளர்ப்பில் சிரத்தை காட்டாமல் இருப்பதற்கும், பிள்ளைகள் பெற்றோருக்குக் கட்டுப்பட மறுப்பதற்கும் சந்தர்ப்ப சூழ்நிலைகளோ அல்லது நாம் வளர்ந்த முறையோ அல்லது உளவியல் காரணங்களோ அடிப்படைக்காரணமல்ல.**

## படைப்பில் குடும்பம்

குடும்பத்தை தேவனே உருவாக்கினார் என்று கூறினேன். ஆதியாகமம் முதல் மூன்று அதிகாரங்களிலும் குடும்பம் உலகில் தோன்றிய விதம் விபரமாகக்கூறப்பட்டுள்ளது. ஆதாமையும், ஏவாளையும் தேவன் உருவாக்கி தனக்குப்பணிந்து வாழும்படி கட்டளையிட்டுள்ளதை இவ்வதிகாரங்கள் விளக்குகின்றன. தேவனின் கட்டளைப்படி வாழ்ந்திருந்தால் ஆதாம் நல்ல குடும்பத் தலைவனாகவும், ஏவாள் பணிந்து நடக்கும் நல்ல மனைவியாகவும் இருந்து உலகில் நல்ல குடும்பங்களே தோன்ற வழி ஏற்பட்டிருக்கும். ஆனால், அதற்கு வழியில்லாதபடி ஆதாமும், ஏவாளும் தேவனின் கட்டளையை ஏற்று நடக்கத் தவறினர். முழு மனித குலத்தினதும் பெற்றோர்களாகிய இவர்கள் செய்த பாவத்தினால் உலகில் பாவம் தோன்றி குடும்பங்களனைத்தும் பாவத்தைச் சுமக்கத்தொடங்கின.

நல்ல குடும்பத்தலைவனாகவும், கணவனாகவும் இருக்க வேண்டிய ஆதாம், பாவத்தினால் இயற்கையாகவே அவ்வாறு இருக்கக்கூடிய நிலையை இழந்து ஏவாளை அன்போடு ஆளாமல் அதிகாரத்தோடு மட்டும் ஆளும் கணவனாக மாறினான். கணவனுக்குப்பணிந்து அவன் தலைமையை ஏற்று அன்போடு நடந்து கொள்ள வேண்டிய ஏவாள் அவனுக்குப்பணிய மறுத்து அவனை ஆண்டு கொள்ள முற்பட்டாள். பாவத்தினால் ஏற்பட்ட இந்நிலைமையே இன்று சமுதாயம் எங்கும், எல்லா நாடுகளிலும் எல்லாக் குடும்பங்களிலும் பார்க்கிறோம். இந்த உண்மையைத்தான் ஆதியாகமம் 3:16 வெளிப்படுத்துகிறது. “உன் ஆசை உன் புருஷனைப்பற்றியிருக்கும். அவன் உன்னை ஆண்டு கொள்ளுவான்” என்ற வசனங்களுக்கு மூலத்தில் இதுதான் பொருள். பாவத்தின் காரணமாக பெண்களுக்கு இயற்கையாகவே கணவனுக்கு அடிபணிந்து நடக்கும் எண்ணம் வராது. அதே நேரம் மனைவியை அன்போடு நடத்தும் வழக்கமும் கணவனுக்கு இயற்கையாகவே வராது. கல்வின் இதைக்குறித்து விளக்கும்போது, “ஏவாள் பாவம் செய்வதற்கு முன்பு தன் கணவனுக்கு இணங்கி தாழ்மையுடன் அவனுக்கு அடிபணிந்தாள். ஆனால், இப்போதோ பாவம் அவளை அதிகாரம் செய்யும் படியாகத் தூண்டுகிறது” என்று கூறுகிறார். இதனால்தான் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவர்களாகிய கணவனும், மனைவியும் எவ்வாறு வாழ வேண்டும் என்று போதிக்கும் பவுல், கணவன் மனைவி மீது அன்பு செலுத்த வேண்டும் என்றும், மனைவி கணவனுக்கு அடிபணிந்து நடக்க வேண்டும் என்று போதிக்கிறார் (எபேசியர் 5). இதற்குக் காரணம் என்ன? பாவத்திலிருந்து விடுபட்டு கிறிஸ்துவை அறிந்து கொண்டுள்ள கணவனும், மனைவியும், பாவத்தினால் இயற்கையாகத் தாம் நடந்து கொள்ளும் முறைகளை விட்டுவிலகி தேவனுடைய கட்டளைப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். கணவன் பாவசுபாவத்தோடு மனைவியை ஆள முற்படக்கூடாது, ஆனால், அன்புடன் அவளை வழிநடத்த வேண்டும். அதேவேளை, மனைவி கணவனை ஆளமுற்படாமல் அன்புடன் அவனுக்கு அடங்கி நடக்க வேண்டும்.

## பாவத்தில் குடும்பம்

*பாவம் இன்று ஆணையும், பெண்ணையும் தேவன் ஆரம்பத்தில் படைத்த நிலையிலிருந்து மாற்றியிருப்பதால்தான் குடும்பங்கள் இயற்கை யாகவே தேவனின் வழிப்படி நடக்க முடியாமல் தவிக்கின்றன. கணவன், மனைவி உறவு சரியில்லாமல் இருப்பதற்கும், பெற்றோர்கள் பிள்ளை வளர்ப்பில் சிரத்தை காட்டாமல் இருப்பதற்கும், பிள்ளைகள் பெற்றோருக்குக் கட்டுப்பட மறுப்பதற்கும் சந்தர்ப்ப சூழ்நிலைகளோ அல்லது நாம் வளர்ந்த முறையோ அல்லது உளவியல் காரணங்களோ அடிப்படைக்காரணமல்ல. பாவமும் அது மனிதனில் தொடர்ந்து செய்துவரும் கிரியை களுமே இதற்கான அடிப்படைக்காரணம். இதுவே கர்த்தரின் வேதம் போதிக்கும் உண்மை.*

## கிறிஸ்தவர்கள் அல்லாதோரின் குடும்பம்

*இருந்தபோதும், பாவத்தால் பீடிக்கப்பட்டுள்ள மனிதன், தேவனின் சாயலில் படைக்கப் பட்டிருப்பதால், தனது பாவ நிலையிலும் குடும்பத்தை உருவாக்கி வாழவும், அதைசரியான முறையில் நடத்தவும் தேவனுக்கு முன் கடமைப்பட்டுள்ளான். நியாயப் பிரமாணம் அவர்களுடைய இருதயத்தில் எழுதப்பட்டிருப்ப தாலும், பாவத்தைக்கட்டுப்பாட்டில் வைத்திருக்குமுகமாக தேவன் பத்துக் கட்டளைகளைக் கடைப்பிடிக்கும் படி எல்லா மனிதர்களுக்கும் அதனைக் கொடுத்திருப்பதாலும், மனிதன் தேவனுக்குக் கடமைப்பட்ட வனாகக் காணப்படுகிறான். எனவே, வேதம் பாவியான மனிதர்களும் தங்களுடைய குடும்பத்தை நல்லபடியாக நடத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. கீழ்வரும் வசனங்கள் இதையே போதிக்கின்றன. “உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்கு பாம்பைக் கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக்கொடுக்க அறிந்திருக்கும் போது பரலோகத்திலிருக்கும் உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்கிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?” (மத்தேயு 7:9-11). மேலும் எபிரேயர் நிருபத்தில், “நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும் போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்க வேண்டு மல்லவா? அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள்; இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார்.” என்றும் வாசிக்கிறோம். இவ்வசனங்கள் உலகத்திலுள்ள தேவனை அறியாத மனிதர்களும் தங்களுடைய குடும்பத்தை நன்றாக நடத்த வேண்டும் என்று எதிர்பார்க்கின்றன. தேவனை அறியாத மக்களில் பலர் கிறிஸ்தவர்கள் வெட்கப் படும் அளவுக்கு தங்களுடைய குடும்ப வாழ்க் கையை நல்ல முறையில் வைத்திருப்பதற்கு இதுவே காரணம்.*

## கிறிஸ்தவக் குடும்பம்

*வேதம் மனித குலமனைத்தும் குடும்ப வாழ்க்கை யில் அக்கறையெடுத்து தேவனுக்கு மகிமையளிக் கும்வகையில் வாழ வேண்டும் என்று எதிர்பார்த் தாலும், பாவத்தின் காரணமாக மனிதன் அதில் இறுதி வெற்றி காண முடியாத நிலையில் இருக்கிறான். இதனா லேயே, இன்று ஒழுக்கக்குறைவான நிகழ்வுகள் உலகில் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. குடும்பங்கள் அமைதி இழந்து தவித்துக் கொண்டிருக்கின்றன. ஆகவேதான், மனிதர்கள் இன்று கிறிஸ்துவை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. பாவத்திலிருந்து மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களுக்கே அவரது கட்டளைகள் புரியும்; அவரைத் தங்களுடைய குடும்ப வாழ்க்கையில் மகிமைப்படுத்த வேண்டும் என்ற வைராக்கியமும் தோன்றும். கிறிஸ்தவர்களில் கிறிஸ்து வாழ்வதால் ஆவியானவரின் அனுக்கிரகத்தால் கிறிஸ்துவின் கட்டளைகளைத் தங்கள் வாழ்க்கையில் கிறிஸ்தவர்களால் கடைப்பிடிக்க முடிகின்றது. அன்பு என்பதை அறியாதிருந்தவர்களுக்கு அதன் அருமையும் பெருமையும் புரிய ஆரம்பிக்கிறது. கணவனால் தனது பாவசுபாவத்தைக் கட்டுக்குள் அடக்கி மனைவியை நேசித்து, அவளுக்கு விசுவாசமாக இருக்க முடிகிறது. கணவனுக்கு மன அமைதி யோடு மனைவியால் கட்டுப்பட்டு நடக்க முடிகின்றது. இவற்றைவிட மேலாக, உண்மையான தேவ அன்பை ஒருவர் மேல் ஒருவர் வைத்து குடும்பமாக தேவனை மகிமைப்படுத்த முடிகின்றது. பிறக்கப் போகும் பிள்ளைகளுக்காக ஜெபத்தில் இருந்தும், பிறந்தபின் அவர்களை கர்த்தருக்குள் வளர்ப்பதைப் பெருங்கடமையாகக் கொண்டும் வாழமுடிகின்றது.*

*இயேசு கிறிஸ்துவைத் தலைவராகக் கொண்டமை யாத குடும்பங்களும் தேவனை மகிமைப்படுத்தும் படி வாழ வேண்டிய கடமைப்பாடு இருந்த போதும், கிறிஸ்துவைத் தலைவராகக் கொண்டமை ந்த குடும்பத்தால் மட்டுமே கிறிஸ்துவை மகிமைப் படுத்த முடியும். கிறிஸ்தவக் குடும்பத்தில் கிறிஸ்து*

> **நவீன உளவியல் ரீதியிலான வழிமுறைகளைப் பின்பற்றி குடும்பவாழ்க்கை நடத்த முயல்வதும், அதன் பிரச்சனைகளைத் தீர்க்கப் பார்ப்பதும் வேதத்திற்கு முரணான செயலாகும்.**

வின் வார்த்தைக்கு மதிப்புக் கொடுக்கப்படும். கிறிஸ்து அங்கே ஆராதிக்கப்படுகிறார். கிறிஸ்து அக்குடும்பத்தில் ஆட்சி செய்கிறார். கிறிஸ்துவின் வார்த்தைக்கு முரணானவைகளைச் செய்ய அக் குடும்பம் தயங்கும். பாவத்தை அக்குடும்பம் வெறுத்து ஒதுக்கும். உலகப்பிரகாரமான வாழ்க்கைக்கும், உலக ஞானத்திற்கும் அக்குடும்பத்தில் இடமிருக்காது. டெலிவிஷன் அக்குடும்பத்தை ஆட்சி செய்யாது. நவீன உடையலங்காரத்திற்கும், பகட்டிற்கும், பண மோகத்திற்கும் அக்குடும்பத்தில் இடமிருக்காது. நவீன பெண்ணியல் போதனைகள் அங்கு தலைகாட்ட முடியாது. மொத்தத்தில் கிறிஸ்தவக் குடும்பமே மேலான குடும்பம். இதுவரை நாம் குடும்பத்தைப்பற்றி வேதம் போதிக்கும் அடிப்படையான உண்மைகளை ஆராய்ந்து அறிந்து கொண்டோம். இவை அடிப்படை உண்மைகளே தவிர இவை மட்டுமே குடும்பத்தைப்பற்றிய வேதமளிக்கும் முழுப் போதனைகளையும் அளித்துவிடவில்லை. குடும்பத்தைப்பற்றி வேதம் போதிக்கும் முழு உண்மைகளையும் நாம் படித்துப் புரிந்து கொள்ளுமுன் நாம் இதுவரை பார்த்த குடும்பத்தைப் பற்றிய அடிப்படைப் போதனைகளில் இருந்து எழும் சில முக்கிய பாடங்களைக் கவனித்தல் அவசியம்.

**1. கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களைத் திருமணம் செய்து கொள்ளக்கூடாது.**

இங்கே நாம் முக்கியமாக கிறிஸ்தவக் குடும்பத்தையே கருத்தில் கொள்கிறோம். ஒரு குடும்பம் கிறிஸ்துவை மகிமைப்படுத்திவாழ வேண்டுமானால் அக்குடும்பத்தின் பிரதான அங்கத்தவர்களான கணவனும் மனைவியும் கிறிஸ்தவர்களாக இருத்தல் வேண்டும். கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களை மணமுடித்தல் ஆகாது. இன்று தமிழ்க் கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படும் பெரும்பாலான குடும்பப் பிரச்சனைகளுக்கு இதுவே அடிப்படைக் காரணமாக இருக்கின்றது.


ஒகு கிறிஸ்தவக் குடும்பத்தின் பிரதான அங்கத்தவர்கள் கிறிஸ்தவர்களாக இருக்கவேண்டுமென்று நாம் கூறும்போது, அவர்களுடைய சபை அங்கத்துவத்தையோ அல்லது அவர்களுடைய பெற்றோர்களின் விசுவாசத்தையோ அல்லது எந்தச் சமயக் குழுவை அவர்கள் சேர்ந்தவர்கள் என்பது பற்றியெல்லாம் நாம் கவலை கொள்ளவில்லை. இவையும் அவசியமானவை என்றாலும் முதலில் அவர்கள் இருவரும் உண்மையில் மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களாக இருக்கிறார்களா? என்பதே மிக முக்கியமான தாகும். இன்று கிறிஸ்தவர்கள் என்று தம்மை அழைத்துக் கொள்ளும் அநேகர் வெறுமனே "மெயின் லைன்" சமயக் குழுக்கள் என்று அழைக்கப்படும் சில சமயக் குழுக்களில் சம்பிரதாயத்திற்கு அங்கத்தவர்களாக இருக்கின்றார்களே தவிர அவர்களுடைய வாழ்க்கையில் கிருபையின் செயலோ அல்லது கிறிஸ்துவோ காணப்படுவதில்லை. சபைப்பாரம் பரியமும், சபை அங்கத்துவமும் ஒருவரைக் கிறிஸ்தவராக மாற்றி விட முடியாது. இத்தகையோரைப் "பெயர்க் கிறிஸ்தவர்கள்" என்று அழைப்பதும் வழக்கம். அதாவது, வெறும் பெயருக்காகத் தம்மை இவர்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்கிறார்களே தவிர, அவர்கள் உண்மையில் கிறிஸ்தவர்கள் அல்ல. இதற்கெல்லாம் காரணம் உண்மைக் கிறிஸ்தவத்தைப் பற்றிய போதனைகள் தமிழர்கள் மத்தியில் சரிவரக் காணப்படாதுதான். பரவசக் குழுக்களும் மெய்யான மனந்திரும்புதலுக்கும், கிறிஸ்துவில் இருக்க வேண்டிய விசுவாசத்திற்கும் முக்கியத்துவம் அளிக்காமல் வெறும் உணர்ச்சிகளுக்குத்தூபம் போடுவதால் அவர்கள் மத்தியில் மெய்க் கிறிஸ்தவர்களை அடையாளம் கண்டு கொள்வதும் கடினமே. இப்பகுதியில் நாம் உண்மையான, வேதபூர்வமான கிறிஸ்தவக்குடும்ப வாழ்க்கையைக் குறித்துப் பார்க்கிறோமே தவிர வெறும் பெயருக்கு கிறிஸ்தவர்கள் என்று தம்மை அழைத்துக் கொள்பவர்களுடைய குடும்ப வாழ்க்கை பற்றியல்ல. இன்று முறையான, வேதபூர்வமான போதனைகளை அளிக்கும் சில சபைகள் தமிழர் வாழும் நாடுகளில் தோன்றி வருவது மகிழ்ச்சி தருகிறது.

**கணவனும், மனைவியும் ஒரே சத்தியத்தை விசுவாசிக்கா விட்டால் குடும்பத்தில் பெரும் பிரச்சனைகள் தோன்றுவதைத் தவிர்க்க முடியாது.**

முக்கியமாக, போதக ஊழியத்தில் இருக்கும் சபைப் போதகர்கள் கிறிஸ்தவர்களை கிறிஸ்தவர்கள் அல்லாதோருக்கு மணமுடித்துவைக்க இடம் கொடுக்கக்கூடாது. திருமண முடிக்கவிருக்கும் இருசாராரையும் போதகர்கள் விசாரித்து அவர்கள் உண்மைக் கிறிஸ்தவர்கள் தாமா என்பதை முதலில் அறிந்து கொள்ள வேண்டும். பலர், சபையாருக்கும், பெற்றோருக்கும் பயந்தும், பிரச்சனைகளை சந்திக்கப் பயந்தும் இதைச்செய்ய முற்படுவதில்லை. இவ்வாறான நிலைமைகளை நானும் போதக ஊழியத்தில் சிலவேளைகளில் சந்திக்க நேர்ந்திருக்கிறது. சிலரை திருமணம் முடித்துவைக்க மறுக்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது. அத்தகைய நிலைமைகளில் போதகர்கள் தேவனுக்குப் பயந்து செயல்பட வேண்டுமே தவிர உலகப் பிரகாரமாக நடந்து கொள்ளக் கூடாது.

கிறிஸ்தவர்கள் ஏன் கிறிஸ்தவர்கள் அல்லாதோரைத் திருமணம் செய்துகொள்ளக்கூடாது? முதலில், வேதம் அவ்வாறே போதிக்கின்றது (2 கொரி. 6:14-17; ஆமோஸ் 3:3). ஒரே தேவனை வணங்காத இருவர் அவருடைய வழிகளின்படி வாழ்வது இயலாது. வேதபோதனைகளுக்கு விரோதமாக கிறிஸ்தவர்கள் அல்லாதோரைத் திருமணம் செய்து கொள்பவர்கள் கர்த்தருடைய ஆசீர்வாதத்தை

(20 ம் பக்கம் பார்க்க)



**குடும்ப ஆராதனை என்பது இன்று அநேகருக்கு மறந்துபோன ஒரு வழக்கமாக இருக்கலாம். கிறிஸ்தவ குடும்பங்கள் கிறிஸ்துவில் வளர இன்று அவசரமாகவும், அவசியமாகவும் தேவைப்படுவது குடும்ப ஆராதனையே.**

# குடும்ப ஆராதனை

இன்று அநேக கிறிஸ்தவர்களில் அநேகருக்கு குடும்பத்தின் மகிமை புரியாமலிருக்கிறது. குடும்பம் எப்படி இருக்க வேண்டும்? ஒருவரது குடும்ப வாழ்க்கையில் கர்த்தர் எதை எதிர்பார்க்கிறார்? என்பதெல்லாம் புரியாமலேயே அநேகர் குடும்பம் நடத்திக் கொண்டு வருகின்றனர். இது நாம் வருந்த வேண்டிய ஒரு விடயம். குடும்பத்தின் நிலைமை இப்படி இருக்கையில் அதில் குடும்ப ஆராதனையை நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்? குடும்ப ஆராதனையா, அது என்ன? என்று கூட கேட்கக் கூடியவர்கள் இருக்கிறார்கள்.

குடும்ப ஆராதனை என்றால் என்ன? என்று முதலில் கவனிப்போம். சுருக்கமாகக்கூறப் போனால், ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பமும், அன்றாடம் அந்நாளின் ஒரு நேரத்தில் கூடி, அக்குடும்பத் தலைவனால் வழிநடத்தப்பட்டு, வேதத்தை வாசித்து, ஊன்றிப்படித்து, சங்கீதங்கள், கீர்த்தனைகளைப்பாடி, ஜெபத்தில் கர்த்தருக்கு முன்வருவது தான் குடும்ப ஆராதனை. ஒவ்வொரு குடும்பமும் இதைச்செய்ய வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். இப்போதனை வேதத்தில் எப்படிக் கொடுக்கப்பட்டிருக்கின்றதென்று பார்ப்போம். முதலில், குடும்ப ஆராதனையின் அவசியத்தை இயற்கையின் விதிகள் நமக்குப் போதிக்கின்றன. அதாவது ஆராதனையின் தேவன் நம்மை ஆராதிக்கும் மனிதர்களாகப் படைத்திருப்பதால், நாமும் நமது குடும்பமும் தவறாமல் அவரை ஆராதிக்க வேண்டும். எல்லாமே கர்த்தருக்குச் சொந்தமானதாக இருக்கின்றது. நாமும், நமது குடும்பமும் அவருக்கே சொந்தம். நம்மை அன்றாடம் ஆளும் அத்தேவன் நமது குடும்பங்களில் ஆராதிக்கப்பட வேண்டும். இதையே வேதத்தில் நாம் காணும் மனிதர்கள் அனைவரும் ஆதியில் இருந்து செய்து வந்துள்ளனர்.

இரண்டாவதாக, வேதமும் குடும்ப ஆராதனையின் அவசியத்தைப்பற்றிப் போதிக்கிறது. ஆபிரகாமும் (ஆதி. 17:18), யாக்கோபுவும் அவர்களுக்குப் பின்வந்த மனிதர்களும் குடும்ப ஆராதனையை நடத்தியுள்ளனர். யோபு இதற்கு ஓர் சிறந்த உதாரணம் (யோபு 1:1-5). சங்கீதப்புத்தகத்தின் பெரும் பகுதியும் இதைக்குறித்துப் பேசுவதைப் பார்க்கலாம் (சங். 92:1,2; 141:2). புதிய ஏற்பாடும் இதைப் பற்றி அநேக இடங்களில் போதிக்கின்றது. பின்வரும் வசனங்களை நாம் ஆராய்ந்து பார்த்தால் அது தெளிவாகப் புலப்படும் - அப்போஸ். 10:2, 30; பிலிப். 4:6; கொலோ. 4:2; 1 தெசலோ. 5:17, 18. இவ்வசனங்கள் குடும்ப ஆராதனைபற்றிய உதாரணங்களையும், போதனைகளையும் வழங்குகின்றன. ஆகவே, குடும்ப ஆராதனையின் அவசியத்தை வேதம் தெளிவாகப் போதிப்பதைக் காணலாம்.

இவ்வேத உண்மைகள் அநேகருக்குப் புரியாமலிருப்பதற்குக் காரணம் அவர்கள் கிறிஸ்தவ வேதஅறிவில் வளராதது மட்டுமன்றி, உலகப்பிரகாரமான எண்ணங்களுக்கு தங்கள் வாழ்வில் இடம்கொடுத்து அதன் வழிப்படிப்போய்க்கொண்டிருப்பதுதான். சமீபத்தில் தமிழில் குடும்ப வாழ்க்கைபற்றிய ஒரு நூலை வாசித்தேன். அதில் ஒரு பக்கத்திலாவது குடும்ப ஆராதனைபற்றிய எந்தவிதப் போதனையும் கொடுக்கப்படவில்லை. இது குடும்ப ஆராதனை பற்றி எந்தளவுக்கு நம்மத்தியில் போதிக்கப்படுகிறது எனபதற்கு ஓர் நல்ல உதாரணம். வேதத்தைப் பொறுத்தவரையில் குடும்பம் நிலைக்க வேண்டுமானால் குடும்ப ஆராதனை அவசியம். அதுமட்டுமல்ல, குடும்ப ஆராதனை நடத்தத்தவறுபவர்கள் சபை ஆராதனைக்கு மதிப்புக்கொடுத்து அதில் சரிவரப்பங்கு கொள்வார்கள் என்றும் எதிர்பார்க்க முடியாது.

குடும்ப ஆராதனையை குடும்பத்தலைவனான கணவனே பெரும்பாலும் நடத்த வேண்டும். அவன் தன் குடும்பத்தை வேதபோதனையில் வழி நடத்த வேண்டும். சங்கீதங்களைக் குடம்பத்தோடுபாடிக் கர்த்தரை ஆராதிக்க வேண்டும். ஜெபத்தில் கர்த்தருக்கு முன் தங்களுடைய தேவைகளைக்கொண்டு வருதல் வேண்டும். இத்தகைய குடும்ப ஆராதனையை அன்றாடம் நடத்தத்தவறும் குடும்பங்கள் அழிவையே நாடிப் போய்க்கொண்டிருக்கின்றன. குடும்ப ஆராதனை என்றால் வெறுமனேகூடி வேதத்தின் ஏதொ சிறு பகுதியை வாசித்துவிட்டு ஒரு ஐந்து நிமிட நேரம் ஜெபம் செய்வது அல்ல. கருத்தோடும், பொறுப்போடும், தேவபயத்தோடும் முழுக்குடும்பமும் தவறாமல் கூடிவந்து கர்த்தரை ஆராதிப்பதே குடும்ப ஆராதனை. இதை எப்படி நடத்துவது? குடும்ப ஆராதனையில் காணப்பட வேண்டிய அம்சங்கள் யாவை என்று நாம் விளக்கமாக இப்பகுதியில் இனிப் பார்க்கப் போகிறோம்.

அவ்வாறு குடும்ப ஆராதனையின் அம்சங்களை நாம் ஆராயுமுன், குடும்ப ஆராதனை நடத்தி, குலம் சிறக்க வாழ்ந்த மனிதர்களையும், சமுதாய த்தையும் பற்றி நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். பழைய ஏற்பாட்டில் யோபு இவ்வாறாக குடும்ப ஆராதனை நடத்தி கர்த்தரை மகிமைப்படுத்தி னான் என்று ஏற்கனவே குறிப்பிட்டோம். யோபு வைப்போலவே பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் அனைவரும் தங்களுடைய குடும்பங்களை நடத்தியுள்ளனர்.

இதனை மனத்தில் கொண்டே நமது முன்னோர் களான பியூரிட்டன் பிதாக்களும் குடும்ப வாழ்க் கைக்கும், குடும்ப ஆராதனைக்கும் தம் காலத்தில் முதலிடம் கொடுத்தனர். திருச்சபையின் ஞாயிறு ஆராதனைக்கு சிறப்பான இடத்தை அளித்த இப்பெரியோர்கள் அதற்கு அடுத்தபடியாக குடும்ப ஆராதனைக்கு மிக முக்கிய இடத்தை அளித்தனர். ஒவ்வொரு நாளும் இரு தடவை குடும்பங்கள் கூடி குடும்ப ஆராதனை நடத்த வேண்டும் என்று அறிவுரை கூறினர். இவர்களைப் பொறுத்தவரையில் குடும்பம் வீட்டில் வசிக்கும் அந்நியர்களையும், வேலைக்காரர்களையும் உள்ள டக்கியிருந்தது. இதை நாம் வேதத்திலும் பார்க்கி றோம். இம்முறையிலேயே ஐக்கிய அமெரிக்க நாடுகளின் நியூ இங்கிலாந்தில் போய்க்குடியேறிய பியூரிட்டன்களின் குடும்ப வாழ்க்கை அமைந் திருந்தது. குடும்ப ஆராதனை ஒவ்வொருவரையும் ஞாயிறு ஆராதனைக்கு தயார் செய்யும் ஆயுதம் என்று இவர்கள் நம்பினார்கள். ரிச்சட் பெக்ஸ்டர் இங்கிலாந்தில் தாம் ஊழியம் செய்த கிடர்மின்ஸ் டரில் இவ்வகையில் எல்லாக் குடும்பங்களிலும் குடும்ப ஆராதனை முறையாக நடக்கும்படிப் பார்த்துக்கொண்டார். ஒவ்வொரு நாளும் ஊரில் வீடுகள் தோறும் ஊர்மக்கள் சங்கீதங்கள் பாடி, வேதத்தை வாசித்து ஜெபத்தில் ஈடுபட்டனர். வீதி யில் நடக்கும்போது இவற்றைக் கேட்டு ஆனந்தப் படுவார் ரிச்சட் பெக்ஸ்டர். இக்காலத்தில் கிறிஸ் தவம் தலைசிறந்து காணப்பட்டதில் எந்தவித வியப்புமில்லை. கிறிஸ்தவம் தலைசிறந்து காணப் பட்ட காலங்களில் எல்லாம் குடும்ப ஆராதனை க்கு முக்கிய இடமளிக்கப்பட்டதும் ஆச்சரியம் தரவில்லை.

பதினேழாம் நூற்றாண்டுப்பெரியோர்கள் குடும்ப ஆராதனையின் அவசியத்தைக்கருத்தில்கொண்டு ***1647*** இல் வெளியிட்ட "குடும்ப ஆராதனை வழி காட்டி" என்ற நூலில் குடும்ப ஆராதனையின் அவசியத்தை விளக்கி, அதை எப்படி நடத்துவது என்று ஆலோசனைகளையும் எழுதி வைத்தனர். கிறிஸ்தவ சபைகளில் கடைப்பிடிக்கும்படியாக, இவ்வழிகாட்டி எழுதப்பட்டது. அது மொத்தம் பதினான்கு அறிவுரைகளை உள்ளடக்கி குடும்ப ஆராதனைக்கான ஆலோசனைகளை வழங்கியது. இவற்றை எழுதி வைத்த நமது பெரியோர்கள் சபைப்போதகர்களும், மூப்பர்களும் தமது பொறுப் பில் உள்ள குடும்பங்களில் இவ்வாலோசனை களைப் பின்பற்றி குடும்ப ஆராதனை நடக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும் என்று எழுதி வைத் தனர். அதுமட்டுமல்ல, இவற்றைப் பின்பற்றி நடக் காமல், குடும்ப ஆராதனை நடத்துவதை வீணாக அலட்சியப்படுத்தும் குடும்பங்களை சபைக்கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்றும் போதகர்களுக்கு ஆலோசனை கூறினர். அவ்வாறு குடும்ப ஆராதனையை அலட்சியப்படுத்துபவர்கள் திருந்தி சரிவர வீட்டை நடத்தும்வரை திருவிருந்து எடுப்பதில் இருந்து நிறுத்தி வைக்க வேண்டும் என்றும் இவர்கள் போதகர்களுக்கு ஆலோசனை கூறினர். இதிலிருந்து விசுவாச வாழ்க்கையில் குடும்ப ஆராதனைக்கு நமது முன்னோர்கள் கொடுத்த முக்கிய இடத்தைப் புரிந்து கொள்ள முடிகிறதல்லவா? குடும்ப ஆராதனை நடத்தாத கிறிஸ்தவன் கிறிஸ்துவைத் தன் வாழ்க்கையில் ஆராதிக்கத் தவறுகிறான் என்பதே நமது பெரி யோர்களின் தீர்க்கமான முடிவு.

ஸ்கொட்லாந்தில் வாழ்ந்த, கர்த்தரால் ஆசிர்வதிக் கப்பட்ட அருமைப்போதகராக இருந்த ரொபட் மரே மெக்சேயின் குடும்ப ஆராதனையின் அவசி யத்தைப்பற்றி பின்வருமாறு கூறுகிறார்: "உங்களு டைய குடும்பங்களிலே கர்த்தரை ஆராதியுங்கள். உங்கள் குடும்பத்துடன் கர்த்தரை நீங்கள் வீட்டில் ஆராதிக்காவிட்டால் பாவத்திலேயே வாழ்கிறீர்கள். உங்கள் வீட்டாரின் ஆத்துமாக்களில் நீங்கள் அக் கறை கொள்ளவில்லை. உங்கள் வீட்டுப் பிள்ளை களுக்கு நீங்கள் உணவு படைக்காவிட்டால் உங்க ளுக்கு அவர்கள்மேல் அக்கறையில்லை என்று பேச மாட்டார்களா? அதேபோல், உங்கள் வீட்டைச் சேர்ந்த அனைவருக்கும் வேதத்தின் மூலம் ஆவிக் குரிய உணவை நீங்கள் அளிக்காவிட்டால், அவர் களுடைய ஆத்துமாக்களில் உங்களுக்கு அக்கறை யில்லை என்றே அர்த்தம். காலையும், மாலையும் ஒவ்வொரு நாளும் கர்த்தரை வீட்டாரோடு ஆராதி யுங்கள். இது அன்றாட உணவை விடவும், உங்கள் வேலையைவிடவும் மிக முக்கியமானது. நீங்கள் நர கத்திலிருந்து உங்கள் வாழ்க்கையைப்பற்றி சிந்தித் துப் பார்த்து வருந்தும்போது, வாழ்நாள் முழுதும் குடும்ப ஆராதனை நடத்தத் தவறி அதற்காக நீங் கள் கொடுத்த சாக்குப் போக்குக்கள் உங்களைப் பார்த்து சிரிக்காதா என்ன? குடும்ப ஆராதனை யை நன்றாக நடத்துங்கள். சிலர் குடும்ப ஆரா தனையில் சங்கீதம் பாடுவதை ஒதுக்குவார்கள். வேறுசிலர் வேதவாசிப்பைக் குறைத்துவிடுவார்கள். இதனால் குடும்ப ஆராதனை பாதிக்கப்படுகிறது. அதனை ஆவிக்குரியவிதத்திலும், ஆனந்தமாகவும் நடத்துங் கள். இதை விடவும் அருமையானதும், ஆசீர்வாத முள்ளதுமான கிருபையின் சாதன மொன்றில்லை. எந்தவித சாக்குப்போக்கும் சொல் லாமல் குடும்பத் திலுள்ள அனைவரும் குடும்ப ஆராதனையில் கலந்து கொள்ளுமாறு பார்த்துக் கொள்ளுங்கள்."

எத்தனை சத்தியமான வார்த்தைகள் இவை. நண் பர்களே, குடும்ப ஆராதனை உங்கள் வீடுகளில் தவறாது நடக்கின்றதா? இனி அடுத்த இதழில் இதை எப்படி நடத்துவது என்று விளக்கமாகப் பார்ப்போம்.

# கிறிஸ்தவக் கோட்பாடுகள்

**கேள்வி 39**: மரணத்தின் பின் அவிசுவாசிகளின் நிலை என்ன?

**பதில்**: அவிசுவாசிகளின் ஆவிகள் மரணத்தின்பின் பாதாளத்தின் வேதனையை அனுபவிக்கும்போது, உயிர்த்தெழுதலும், நியாயத்தீர்ப்பும் நிகழும் பெருநாள்வரையிலும் அவர்களுடைய சரீரங்கள் கல்லறைகளில் தங்கியிருக்கின்றன.

லூக்கா 16:23-24; அப்போஸ். 24:15; யோவான் 5:28-29; 2 பேதுரு 2:9.

**விளக்கக்குறிப்பு:** மனிதனுடைய இடைக்கால நிலைமையைப்பற்றி (Intermediate State) இதற்கு முன்னைய வினாவிற்கான பதிலில் விளக்கினோம். அதாவது மனிதன் இறந்தவுடனேயே தனது இறுதி நிலைமையை அடைவதில்லை. அதுமட்டுமல்லாமல், அவன் தொடர்ந்து தானிருந்த நிலைமையிலேயே இருப்பதுமில்லை. ஆகவே, இறப்பில் அவனுள்ள நிலையை இடைக்கால நிலைமை என்று அழைக்கிறோம்.

தேவன் மனிதனைப்படைத்தபோது அவனை ஆவியுடனும், சரீரத்துடனும் படைத்தார். மனிதன் இறக்கும்போது அவனது ஆவியும் சரீரமும் பிரிக்கப்படுகின்றது. மனிதன் இறந்தபின் அவனுடைய சரீரம் மண்ணை அடைகின்றது உருமாறிப் போகின்றது (ஆதி. 3:9; அப்போஸ். 13:36). ஒரு மனிதன் விசுவாசியாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவனுடைய சரீரத்திற்கு இந்நிலைமையே ஏற்படுகின்றது. ஆனால், விசுவாசியைப் பொறுத்தவரையில் அவனுடைய ஆவி பரிசுத்தமடைந்து மகிமையை நோக்கிப் போகின்ற வேளையில் (லூக்கா 23:43; வெளி. 14:13; லூக்கா 16:19-31), அவிசுவாசிகளின் ஆவிகள் உடனடியாகவே நரகத்தின் கொடுமையை அனுபவிக்கத் தொடங்குகின்றன. ஆகவே, விசுவாசிகளையும் அவிசுவாசிகளையும் பொறுத்தவரையில் இவ்விடைக்காலப்பகுதியில் அவர்களுடைய சரீரத்திற்கு ஒரே நிலைமை ஏற்பட்டபோதும், அவர்களுடயை ஆவிகள் வெவ்வேறு இடங்களை அடைகின்றன. (இறப்பின் பின் அவிசுவாசிகளின் சரீரம் மண்ணை அடைந்தபோதும் தேவன் அதை நியாயத்தீர்ப்பின் நாளுக்காகப் பாதுகாக்கிறார்).

இவ்வினாவிற்கான பதில் இரண்டு உண்மைகளைப் போதிக்கின்றது. முதலாவதாக, மரணத்தின்பின் அவிசுவாசிகளின் ஆவிகள் பாதாளத்தின் வேதனையை அனுபவிக்கின்றன. இரண்டாவதாக, அவிசுவாசிகளின் சரீரங்கள் நியாயத்தீர்ப்பு நாள் வரையும் கல்லறைகளில் தங்கியிருக்கின்றன.

1. அவிசுவாசிகளின் ஆவிகள் மரணத்தின்பின் சரீரங்களைவிட்டுப்பிரிந்து உடனடியாக பாதாளத்தை அடைந்து வேதனையை அனுபவிக்கத் தொடங்குகின்றன. லூக்கா 16:22, 23 ஆகிய வசனங்களிலும் வேதத்தின் ஏனைய பகுதிகளிலும் இப்போதனையையே பார்க்கிறோம். அங்கே ஐசுவரியக்காரன் மரித்து அடக்கம் பணணப்பட்டபின் பாதாளத்தின் வேதனையை உடனடியாக அனுபவிக்கிறதாக வாசிக்கிறோம். அவன் இறந்தபின் அவனுடைய ஆவி பாதாளத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அதன் வேதனைகளை அனுபவிக்கத்தொடங்குகிறது. அவ்வேதனையை அக்கினி ஜுவாலையில் எரியும் அநுபவமாக இங்கே விளக்கப்படுகிறது. சிலர் இவ்வேதப் பகுதியை வெறும் உவமை என்றும் இப் போதனையை அதிகாரபூர்வமானதாக ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் கூறுவர். இது வேதத்தின் அதிகாரம் புரியாதவர்களின் வீண் பேச்சு. இப்பகுதியில் உவமையின் மூலமாக கிறிஸ்து பரலோகத்தைப் பற்றியும், பாதாளத்தைப்பற்றியுமான உண்மைகளை வெளிப்படுத்துகிறார்.

மேலே குறிப்பிட்ட வேதப்பகுதியில் மட்டுமில்லாமல் ஏனைய பகுதிகளிலும் நரகமாகிய பாதாளத்தின் வேதனையைப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. யோவானுக்குக்கொடுக்கப்பட்ட தரிசனத்தில், கேடான அவிசுவாசிகள் “அக்கியினாலும், கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவார்கள்” என்றும் “அவர்களுக்கு இரவும் பகலும் இளைப்பாறுதல் இராது” என்றும் எழுதப்பட்டிருக்கிறது (வெளி. 14:10-11). இதையே யோவான், 20:10 லும் விளக்குகிறார். பாதாளத்தில் “அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்குமென்று” மத்தேயு 8:12; லூக்கா 13:28; 16:24; மத்தேயு 24:51; 25:30 ஆகிய வசனங்களில் வாசிக்கிறோம். கேடான அவிசுவாசிகள் படப்போகும் பாட்டைக்குறித்து பவுல் பின்வருமாறு விளக்குகிறார், “சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல் அநியாயத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்கோ உக்கிர கோபாக்கினை வரும். . . . உபத்திரவமும், வியாகூலமும் உண்டாகும்” (ரோமர் 2:8-9).

வேதம், தாங்க முடியாத இந்த அனுபவங்களைப்

பல வார்த்தைகளின் மூலம் விளக்குகிறது. லூக்கா 16:23 ல் torment (Basanos) என்ற வார்த்தையும், 16:24 ல் agony (odunao) என்ற வார்த்தையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. தமிழ் வேதத்தில் இவை இரண்டும் ஒரேவிதமாக "வேதனை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பாதாளத்தின் தாங்கமுடியாத கொடூரமான வேதனையை இவ்விரு வார்த்தைகளும் வெவ்வேறு விதத்தில் விளக்குகின்றன.

அவிசுவாசிகள் இவ்வேதனையை சதா காலமும் அனுபவிக்கப்போகிறார்கள் என்று வேதம் தெளிவாகப் போதிக்கின்றது வெளி. 20:10). ஆனால், இவ்வேத போதனையை மறுதலிப்பவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் Annihilationnism, Conditional Immortality ஆகிய பெயர்களில் காணப்படும் போதனைகளைப் பின்பற்றுபவர்கள். இவ்விரண்டு போதனைகளும் ஒன்றல்ல. Annihilationnism என்ற போதனை, இறந்தபின் எல்லோரும் உடனடியாக ஒன்றுமில்லாமல் போய்விடுவார்கள் என்ற போதனையை அளிக்கின்றது. (அதாவது, சரீரமில்லாமல், ஆவியில்லாமல் காற்றில் கலந்து விடுவார்கள்). இப்போதனையில் நான்கு பிரிவுகள் உள்ளன: (1) இறந்தபின் எல்லோருமே உடனடியாக இல்லாமல் போய்விடுவார்கள். (2) கேடானவர்கள் மட்டும் இறந்தபின் உடனடியாக இல்லாமல் போய்விடுவார்கள் (3) விசுவாசிகளும், கேடானவர்களும் நியாயத்தீர்ப்பு நாளில் உயிர்த்தெழுவார்கள். ஆனால், கேடானவர்கள் மட்டும் உடனடியாக இல்லாமல் போய்விடுவார்கள். (4) நியாயத்தீர்ப்பு நாளில் விசுவாசிகள் பரலோகத்திற்கும், அவிசுவாசிகள் பாதாளத்திற்கும் போவார்கள். ஆனால், அவிசுவாசிகள் பாதாளத்தில் சதாகாலமும் வேதனையை அனுபவிக்க மாட்டார்கள். அவர்கள் குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் அதை அனுபவித்தபின் இல்லாமல் போய்விடுவார்கள்.

ஆனால், Conditional Immortality மனிதன் இயற்கையில் அழிந்து போகவேண்டியவன்; ஆனால், அவன் மனந்திருந்தி கிறிஸ்துவை விசுவாசிப்பானானால் தேவன் அவனுக்கு அழிவில்லாத வாழ்க்கையை வாழும் பாக்கியத்தை அளிப்பார் என்று போதிக்கின்றது. ஆகவே, இப்போதனை Annihilationnism த்தின் முதலாவதைத் தவிர்ந்த ஏனைய மூன்று பிரிவுகளையும் வரவேற்று ஏற்றுக்கொள்கின்றது.

ஜோன் வெனம் (John Wenham) என்பவர் தனது நூலில், "அவிசுவாசிகள் சதாகாலமும் பாதளாத்தில் வேதனையை அனுபவிப்பார்கள் என்ற போதனை சிரிப்புக்கிடமான ஒரு போதனை" என்று வர்ணித்துள்ளார் (*The Goodness of God*). ஜோன் ஸ்டொட்டும் (John Stott, *Essentials 1988*), பிலிப் எட்ஜ்கியூம் ஹியூக்ஸூம் (Philip Edgecume Hughes, *The true image - The origin and destiny of man in Christ, IVP*) அவிசுவாசிகள் இறந்தபின் பாதளத்தில் துன்பத்தை அனுபவிப்பார்கள் என்ற வேதபோதனையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று எழுதியுள்ளார்கள். இவ்விரு மனிதர்களும் சுவிஷேசக்கோட்பாட்டியக்கத்தின் முன்னனித் தலைவர்களாக இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மொரிஸ் ரொபட்ஸ் (Maurice Roberts), இதைக் குறித்து எழுதும்போது, "நமது சரீரத்தையும், ஆவியையும் ஒன்றுமில்லாமல் போகும்படிச் செய்வது தேவனால் இலகுவாக முடிந்த காரியமே. ஆனால், மனித குலத்தைச் சேர்ந்த எந்தவொரு மனிதனையும் தேவன் இந்நிலமைக்கு உள்ளாக்குவார் என்பதற்கு வேதத்தில் எந்தவொரு சாட்சியமும் இல்லை" (*The Banner of Truth, Feb. 1990*) என்று சரியாகவே குறிப்பிட்டுள்ளார்.

2. இவ்வினாவிடை, இவிசுவாசிகளின் சரீரங்கள் இற்ந்தபின் நியாயத்தீர்ப்பு நாள்வரையும் கல்லறைகளில் வைக்கப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கின்றது. அதாவது, தேவன் அச்சரீரங்களைப்பாதுகாத்து நியாயத்தீர்ப்பு நாளில் உயிர்த்தெழச் செய்வார் என்பதே இப்போதனை. அவிசுவாசிகளின் சரீரங்கள் இறந்தபின் உருமாற்றத்தை அடைந்த போதும் கர்த்தர் தன் வல்லமையால் அவற்றைப் பாதுகாத்து உயிர்த்தெழச்செய்வார் என்பது வேதபோதனை. அவிசுவாசிகளின் சரீரங்கள் இறந்தபின் ஒன்றுமில்லாமல் காற்றில் கலந்து விடுவதில்லை என்பதை இவ்வுண்மை மேலும் உறுதிப்படுத்துகின்றது.

கிறிஸ்தவர்கள் இன்று மேலே நாம் கவனித்த போலிப்போதனைகளில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டியது அவசியம். இறந்தபின் அவிசுவாசியின் நிலைபற்றிய வேதபோதனைகளை நிராகரிப்பவர்கள் கிறிஸ்துவின் சுவிஷேசத்தை நிராகரிக்கிறார்கள். அவிசுவாசியின் இறுதிநிலையை உணர்ந்து நாம் ஊக்கத்தோடும், உறுதியோடும் இன்று சுவிஷேசத்தை அறிவிக்க வேண்டியது அவசியம்.


# இரு புதிய நூல்கள்

**கிறிஸ்தவன் யார்? - அல்பர்ட் என். மார்டின் NZ $1.00**

**உப்பு தன் சாரத்தை இழந்தால் - மொரிஸ் ரொபட்ஸ் NZ $1.00**

*ஆறு பிரதிகளுக்கு தபால் செலவு* **NZ$2.00**. *வங்கிக் காசோலைகள்* "Bible Lamp" *என்ற பெயரில்* Sovereign Grace Publications, P O Box 62 159, Sylvia Park, Auckland, New Zealand *என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.*



# வில்லியம் கேரி

**வில்லியம் கேரி**

***கர்த்தரிடமிருந்து பெருங்காரியங்களை எதிர்பாருங்கள்; கர்த்தருக்காகப் பெருஞ்சாதனைகளைச் செய்யுங்கள்***

## இந்திய மொழிகளில் வேதம்

போர்ட் வில்லியத்தில் கேரி ஆற்றிய முப்பது வருடகால பேராசிரியர் பணி அவரது வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான ஒரு காலப்பகுதி. இக்காலப்பகுதியில் ஐரோப்பியர்கள் மட்டுமன்றி அநேக உள்ளூர் பண்டிதர்களின் நட்பும் கேரிக்குக் கிடைத்தது. இக்காலத்தில் கேரிக்கு ஒரு நல்ல யோசனை உதய மாயிற்று. இவ்வறிஞர்கள் பலருடைய துணையுடன் இந்திய மொழிகள் பலவற்றிலும் வேதத்தை மொழிபெயர்த்தால் என்ன? என்பதுதான் அந்த எண்ணம். இவ்வெண்ணம் நிறைவேற உதவும்வகையில் போர்ட் வில்லியம் கல்லூரியில் வேதமொழிபெயர்ப்புக்கென்று ஒரு பகுதியும் கல்லூரி நிர்வாகி களால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

வங்காள மொழியில் துல்லியமாக ஒரு நல்ல மொழிபெயர்ப்பைக்கொண்டு வர வேண்டுமென்பதே கேரியின் ஆரம்ப ஆசையாக இருந்தது. இத்தோடு ஹிந்தியில் அத்தகைய மொழிபெயர்ப்பைக் கொண்டுவரவேண்டுமென்ற ஆவலும் இணைந்துகொண்டது. 1802 இல் ரைலன்டிற்கு எழுதிய கடிதத்தில் தான் இறப்பதற்கு முன் இவ்விரு மொழிகளிலும் வேதத்தை மொழிபெயர்ப்பது தனது இலட்சியம் என்று கேரி எழுதியிருந்தார். இது நிச்சயமாக அவரது கனவாக இருந்தது.

இதைவிடவும் மேலான காரியங்களைப்பார்ப்பீர்கள், என்ற கிறிஸ்துவின் வார்த்தைகள் அவரது காதில் அடிக்கடி ரீங்காரமிட்டுக்கொண்டிருந்தன. கர்த்தரிடமிருந்து பெருங்காரியங்களை எதிர்பாருங்கள், என்ற அவரது பிரசங்க வார்த்தைகள் மனதில் அடிக்கடி தோன்றியது. வார்ட் ஆரம்பத்தில் இது நடக்காத காரியம் என்று எண்ணி கேரியைக் கடிந்து கொண்டார். ஆனால் மார்ஸ்மன் உடனடியாக கேரியின் பக்கம் சேர்ந்து கொண்டார். கர்த்தரின் பாராமரிப்பு வழிநடத்தும் இத்தகைய அருமையான சந்தர்ப்பத்தை நழுவ விடுவது பாவமான காரியம் என்று கேரி கருதினார். ஆனால், இறுதியில் மூவருமே இப்பணியில் ஈடுபடுவது என்று முடிவெடுத்தனர். அத்தோடு, தங்களுடைய வாழ்க்கையில் இக்காரியத்திற்காக அதிக தியாகத்தையும் செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என்பதும் அவர்களுக்குப் புரிந்திருந்தது.

பல பண்டிதர்களுடன் இணைந்து வேதத்தை மொழிபெயர்த்து, சரிபார்த்து திருத்தி வெளியிடுவதை சாதாரண காரியமாக அவர்கள் எண்ணவில்லை. அது அதிக ஊக்கத்தோடு, கவனத்ததோடு செய்ய வேண்டிய காரியம் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். சமஸ்கிருதத்தில் ஏற்கனவே பரிச்சயம் பெற்றிருந்த கேரிக்கு இது முடியாத காரியமாகத்தென்படவில்லை. மார்ஸ்மன் தனது சமஸ்கிருத அறிவைப்பெருக்கிக்கொள்வதில் உடனடியாக ஈடுபட்டார். வார்ட் அச்சக வேலைகளில் கவனமெடுத்தார். தாங்கள் நடத்திய கல்லூரி தந்த வருமானத்தில் பண்டிதர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியும் என்ற நம்பிக்கையுடன் அதற்காக அவர்கள் கர்த்தருக்கு நன்றி தெரிவித்தனர்.

கேரி, வார்ட், மார்ஸ்மன் மூவரும் முதலில் ஹிந்தியில் வேதத்தை மொழி பெயர்ப்பதில் ஈடுபட்டனர். ஆரம்பத்தில கேரிக்கு இப்பணியில் பலவீனம்

இருந்தபோதும், 1796 ம் ஆண்டிற்குள் ஹிந்தியில் நன்றாக, தெளிவாக பேசக்கூடிவராக இருந்தார். 1803 ம் ஆண்டு இறுதியில் புதிய ஏற்பாட்டு நிறுபங்களின் முதல் மொழி பெயர்ப்பு தயாராகிவிட்டது. அதேவேளை வார்டும், மார்ஸ்மனும் சுவிஷேச நூல்களை மொழிபெயர்ப்பதில் ஈடுபட்டனர். ரைலன்டிற்கு தங்களுடைய முயற்சியைப்பற்றிக் கடிதம் எழுதிய கேரி, இன்னும் பதினைந்து வருடங்களுக்குள் முக்கியமான இந்திய மொழிகளில் வேதத்தை மொழி பெயர்ப்பது தங்களுடைய நோக்கம் என்று தெரிவித் தார். இதேநேரம் கேரி மராத்தி, ஒரியா மொழிகளைக் கற்பதிலும் ஈடுபட்டார்.

மொழிபெயர்ப்பு வேலைகளுக்காக இங்கிலாந்திலும் ஊக்கத்துடன் ரைலன்ட் 1300 மைல்கள் பிரயாணம் செய்து 1300 பவுண்களைத்திரட்டியிருந்தார். தாம் மொழி பெயர்த்து வெளியிட்டிருந்தவற்றை மறுபடியும் கேரி திருத்தி, திருத்திய பதிப்புகளாகவும் வெளியிடும் வேலையிலும் ஈடுபட்டார். தமக்குத்துணையாக இருந்த சில பண்டிதர்கள் வேண்டுமென்றே தமதுவேலைகளைத் தாமதப்படுத்துவதை உணர்ந்த கேரி, தனது கனவாகிய பல இந்திய மொழிகளில் வேதத்தை மொழிபெயர்க்கும் நோக்கம் நிறைவேற வேண்டுமானால் முதலில் சமஸ்கிருதமொழியில் வேதத்தை மொழிபெயர்ப்பது அவசியம் என்று உணர்ந்தார். ஏனெனில், அநேக ஐரோப்பிய மொழிகளுக்கு இலத்தீன் தாய்மொழியாக இருந்தது போல், பல இந்திய மொழிகளுக்கு சமஸ்கிருதம் தாய்மொழி யாக இருந்தது. ஆகவே, சமஸ்கிருதத்தில் வேதத்தை மொழிபெயர்ப்பது மற்ற இந்திய மொழிகளில் வேதத்தை மொழிபெயர்ப்பதில் பாதி வேலை நிறைவேறியது போலாகும். அவருடைய பண்டிதர்கள் அனைவருக்கும் சமஸ்கிருதம் தெரிந்திருந்தது. ஆகவே, அவர்களுடைய கரத்தில் சமஸ்கிருதத்தில் வேதம் இருந்தால் தங்களுடைய மொழியில் சுலபமாக அவர்கள் வேதத்தை மொழிபெயர்த்து விடலாம். இதன் மூலம் ஒரே கல்லில் பல கனிகளை வீழ்த்திவிடலாம் என்று கேரி எண்ணினார்.

கேரி ஒவ்வொருநாளும் காலை ஐந்து மணி முதல் இரவு பதினொரு மணிவரை அயராது உழைத்தார். பலர் இந்த மனிதருக்கு எத்தகைய சரீரத்தைக் கடவுள் கொடுத் திருக்கிறார் என்று எண்ணி வியக்கும் அளவுக்கு கேரி செயல்பட்டார். தனது வேலை முடியும்வரை அவர் உண்பதோ, உறங்குவதோ இல்லை. சமஸ்கிருதத்தில் வேதம் மொழி பெயர்க்கப்பட்டபின் கேரி எதிர்பார்த்தபடி மொழி பெயர்ப்பு வேலை துரிதமாக நடந்தது.

கேரி ஒரேநேரத்தில் இருமொழிகளைப்படித்தபோது ஒன்றுக்கொன்று எதிர்மாறான மொழிகளைப்படித்தார் என்பதை நாம் கவனிக்க வேண்டும். உதாரணமாக தெலுங்கு மொழியையும், பார்ஸிய மொழியையும் எடுத்துக்கொள்ளலாம். தெலுங்கைவிட பார்ஸிய மொழி படிப்பதற்கு மிகக் கடினமானது. இதிலிருந்து கேரி எத்தனை சிறந்த மொழி வல்லுனராக இருந்தார் என்பதைப்புரிந்து கொள்ளாம்.

செராம்பூர் மிஷனரிகள் பல முக்கிய இந்தியமொழிகளில் வேதத்தை மொழிபெயர்ப் பதைத் தமது முக்கிய நோக்கமாகக்கொண்டிருந்தபோதும், பவுலை உதாரணமாகக் கொண்டு பல முக்கிய இடங்களில் சுவிஷேச ஊழியத்தில் ஈடுபடுவதிலும் தவறவில்லை. தென்னிந்தியாவில் அத்தகைய ஊழியத்தை அவர்கள் ஒல்லாந்து, தென்மார்க்கு மிஷ னரிகளின் கையிலும் இலண்டன் மிஷனரி சொசாயிட்டியின் கையிலும் விட்டிருந்தார் கள். ஏனைய பகுதிகளில் மிஷனரிகளுடன், இந்திய போதகர் அல்லது சுவிஷேச ஊழியர்களை நியமிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டனர். இவ்வூழியங்களுக்காக மிஷனரிகள் வருவதை இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் இருந்தும் எதிர்பார்த்தனர்.

இந்தியர்களுக்கு மத்தியில் பிரசங்கிப்பதற்கு இந்தியப்போதகர்களை உருவாக்குவதில் செராம்பூர் மிஷனரிகள் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தனர். கிருஷ்ண பிரசாத் கல்கத்தா வில் நல்ல முறையில் ஊழியம் செய்து கொண்டிருந்தார். பாதிக் சந்திரா தனது கிராமத்திலிருந்து வெளியேற்றப்பட்டபோதும் பயமென்பதே அறியாத சுவிஷேசக ஊழியராயிருந்தார். கிருஷ்ணபாலும், பிட்டாம்பர் சிங்கும் ஏற்கனவே போதகர்களாக நியமனம் பெற்றிருந்தனர்.

உள்ளூர் ஊழியங்களை உள்ளூர் மக்களுடைய கலாச்சாரமும், மொழியும் தெரிந்த மக்களைப்போல் திறம்பட செய்யக்கூடியவர்கள் எவரும் இல்லை என்பதை கேரியும் மற்றவர்களும் உணர்ந்திருந்தனர். வெளிநாட்டவர்களான கேரிக்கும், வார்டுக்கும், மார்ஸ்மனுக்கும் கீழைத் தேச மக்களைக் கர்த்தரிடம் அழைத்து வருவதில் இருந்த பேரார்வமும், உழைப்பும், தியாகமும் இன்று நம்மிடம் இருக்கிறதா என்று எண்ணிப் பார்க்கத்தான் வேண்டும்.

**கேரிக்கும், வார்டுக்கும், மார்ஸ் மனுக்கும் கீழைத் தேச மக்களைக் கர்த்தரிடம் அழைத்து வருவதில் இருந்த பேரார்வமும், உழைப்பும், தியாகமும் இன்று நம்மிடம் இருக்கிறதா என்று எண்ணிப் பார்க்கத் தான் வேண்டும்.**

# சீர்திருத்த விசுவாசம்!

– இயன் மரே –

இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் விசுவாசிகளைக் குறிப்பதற்காக கிறிஸ்தவர்கள் என்ற வார்த்தையைத்தவிர வேறு பெயர்களைப் பயன்படுத்த வேண்டிய நிலைமை குறித்து நமக்கு கவலை ஏற்பட்டாலும், அத்தகைய வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்தை சபை வரலாற்றில் தோன்றிய மாற்றங்கள் ஏற்படுத்தியுள்ளன. இன்றைய சூழலில் இது மிகவும் உண்மையானதாகும். ஏனெனில், இன்று கிறிஸ்தவர்கள் என்று தம்மை அழைத்துக்கொள்ளும் பலர், கிறிஸ்துவின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு நடக்காமலும், அவரது மந்தையைச் சேர்ந்தவர்களாகத் தம்மை நிருபித்துக்காட்டமுடியாமலும் இருப்பது (யோவான் 10) கிறிஸ்தவர்களைக்குறிக்க வேறு பெயர்களைப் பயன்படுத்தவேண்டிய அவசியத்தை ஏற்படுத்துகிறது.

இருண்டகாலமென அழைக்கப்படும் இடைக் காலப்பகுதியில், ஐரோப்பாவில், திருமுழுக்குப் பெற்று உலகப்பிரமாணமான சபையோடு தம்மை இணைத்துக் கொண்டவர்களையெல்லாம் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கும்முறை தோன்றியபோதே கிறிஸ்தவர்கள் என்ற வார்த்தைக்கு முதன் முதலாகக் களங்கம் ஏற்பட்டது. உண்மையான விசுவாசத்தையே அறியாத இந்தக்கூட்டம் வாழ்ந்த 14, 15 ஆம் நூற்றாண்டுகளில் உண்மையான கிறிஸ்தவ விசுவாசிகள் லோலார்ட்ஸ் (விக்ளிப்பின் சீடர்கள்) என்றும், ஹஸ்சைட்ஸ் (ஹஸ்ஸின் சீடர்கள்) என்றும் வேறு பெயர்களால் அழைக்கப்பட்டனர். சீர்த்திருத்தவாதம் தோன்றிய பதினாறாம் நூற்றாண்டில் கிறிஸ்துவின் சிலுவைப் பரிகாரப்பலியின் மூலம் மட்டுமே நீதிமானாக்கப்படலாம் என்ற, மார்டின் லூதரின் சுவிஷேத்தைப் பின்பற்றியவர்கள், லூதரன் என்று அழைக்கப்பட்டனர். (இன்றைய லூதரன் சபையைச்சேர்ந்த பெரும்பாலானோர் இவற்றை நம்புவதில்லை). சீர்த்திருத்தவாதம் வளர்ந்து, தளைத்து, திருச்சபை வேதஅறிவில் துளிர்விட்டு வளரத்தொடங்கியபோது மூன்று விதமான உண்மைகள் வலியுறுத்திப் போதிக்கப்பட்டன.

1. கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் பலன்களும், பரிசுத்த ஆவியின் திட்ப உறுதியான செயலின் மூலம் ஏற்படும் மறுபிறப்பும் தெய்வீகக்கிருபையின் அடிப்படையில் மட்டுமே வழங்கப்படுகின்றன. இப்போதனை, இரட்சிக்கப்பட்டவர்களுக்கும், இரட்சிக்கப்படாதவர்களுக்கும் இடையில் காணப்படும் இடைவெளிக்கான அடிப்படைக் காரணம் மனித சித்தமே என்ற போதனையை முற்றாக நிராகரிக்கின்றது.

2. திருச்சபையை வேதம் மட்டுமே ஆள வேண்டும். திருச்சபையின் அனைத்துக்காரியங்களும் வேத போதனைகளின்படியே நடக்க வேண்டும். வேதம் அனுமதிக்காத காரியங்கள் திருச்சபையில் ஒரு போதும் நுழையக்கூடாது. “வேதம் மட்டுமே” என்ற இந்த சீர்திருத்தவாதப்போதனை நம்மை மனித சடங்குகள், பாரம்பரியங்கள் ஆகியவற்றின் தளைகளிலிருந்து இருந்து நம்மை விடுவிக்கின்றது.

3. படைப்பு, மீட்பு மற்றும் எல்லாக் காரியங்களினதும் இறுதி நோக்கம் தேவனை மகிமைப்படுத்துவதே. “தேவனுக்கு மட்டுமே மகிமை”, என்பதே மூன்றாவது சீர்திருத்தவாதப் போதனை.

பியூரிட்டன்களின் காலத்தில் இம்மூன்று விதிகளையும் ஏற்றுக்கொண்ட சபைகளே சீர்திருத்தவாத சபைகள் என்று அழைக்கப்பட்டு சுவிட்சர்லாந்து, பிரான்ஸ், ஒல்லாந்து, ஸ்கொட்லாந்து, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் காணப்பட்டன. பதினேழாம் நூற்றாண்டில் இந்நாடுகளில் தோன்றிய விசுவாச அறிக்கைகளும், வினாவிடைப்போதனைகளும் இவ்விதிகளையே அடிப்படையாகக்கொண்டு அமைந்திருந்ததோடு, இச்சபைகளையும் ஒன்றுபடுத்தி “சீர்திருத்த விசுவாசம்” என்ற பெயர் ஏற்படுவதற்கும் காரணமாக இருந்தன. நியூ இங்கிலாந்தில் (ஐக்கிய அமெரிக்க நாடுகள்) நிறுவப்பட்ட முதல் சபையில் இருந்து இந்தியா, ஆபிரிக்கா, சீனா மற்றும் தென்சீனக்கடல் பகுதிகளுக்குச் சென்ற முதல் புரட்டஸ்தாந்து மிஷனரிகள்வரை அனைவரும் இவ்விசுவாசத்தையே கொண்டிருந்தனர். சீர்திருத்தவாத காலத்திற்குப்பின்பு ஏற்பட்ட எழுப்புதல் காலப் பகுதிகளில் தோன்றிய சபைகளும் இவ்விசுவாசத்தையே கொண்டிருந்தன. இக்காலப் பகுதிகளின் முன்னோடிகளான ஜோர்ஜ் விட்பீல்ட், ஸ்பர்ஜன் ஆகியோரும் இதனையே விசுவாசித்தனர். வேதத்தின் அதிகாரத்திற்கு முழுமையாகக்கட்டுப்படுவதுடன், நாம் எல்லாவற்றிற்குமாகத் தங்கியிருக்கும் கிறிஸ்துவுக்குத் தன்னை முழுமையாக ஒப்புக்கொடுக்கும் விசிவாசமாகவே சீர்திருத்தவாத விசுவாசம் வரலாற்றில் பெயர் பெற்றுள்ளது. கிறிஸ்தவத்திற்காகப்போராடிய இருபதாம் நூற்றாண்டுகளின் தலைசிறந்த மனிதர்களில் ஒருவரான கிரேசம் மேகன் தனது நண்பர் ஒருவரைப்பார்த்து, “சாம், சீர்திருத்தவாதம் எத்தனைப்பெரியது!” என்று கூறிய போது இவ்வுண்மையையே சுட்டிக் காட்டினார்.

**வேதம் மட்டுமே! - கிருபை மட்டுமே! - விசுவாசம் மட்டுமே!**

# 1689 விசுவாச அறிக்கை

# திரித்துவம்

அதிகாரம் 2 : பாகம் 1

விளக்கம்: அலன் டன் - தமிழில்: ஆசிரியர்

இவ்விதழில் 1689 விசுவாச அறிக்கையின் இரண்டாம் அதிகாரம் திரித்துவத்தைப்பற்றி அளிக்கும் போதனைகளைப் பார்ப்போம்.

பத்துக்கட்டளைகளின் முதலிரண்டு கட்டளைகளையும் நாம் விசுவாசத்துடன் பின்பற்றுவதிலேயே வேத ஒழுக்கவியல் தங்கியிருக்கின்றது (யாத்தி. 20:3-6). வேதமும், வரலாறும் மனிதனின் மிகப்பெரும் பாவமாக அவனுடைய உருவவழிபாட்டையே சுட்டிக்காட்டுகின்றன. பாவியாகிய மனிதனால் தனக்குள் காணப்படும் அடிப் படையான ஆராதிக்கும் உணர்வுகளை அடக்கிவைக்க முடியாது. அவன் அவ்வுணர்வுகளை வெளிப்படுத்தியே ஆக வேண்டும். பவுல், பத்துக்கட்டளைகளின் இரண் டாம் கட்டளையின் வார்த்தைகளைப்பயன்படுத்தி, "தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத்தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள்" என்று கூறுகிறார் (ரோமர் 1:25). மனிதனால், படைத்தவரை அவருடைய படைப்பி லிருந்து பிரித்துவிட முடியாது. ஆனால், அவன் அதைப் பொய்யாக்கும் முயற்சியில் ஈடுபடலாம். தேவனின் சாயலில் தேவனால் படைக்கப்பட்ட சிருஷ்டியாகிய மனிதன், தேவனின் சாயலில் ஒரு கடவுளைத் தோற்று விக்கிறான். பிசாசின் பொய்களின் வழியில் சென்று உருவங்களை ஏற்படுத்தி அவற்றைக் கடவுளாகக் கருதுகிறான். அவன் போலியான விசுவாசத்துடனும், தன்னலமும், பெருமையும் கொண்டு, தேவனுக்கு எதிராக மேலும் மேலும் உருவங்களை ஏற்படுத்தி வழிபடுகின்றான். மனிதன் பாவத்தில் வீழ்ந்த நாட் தொடக்கம், இஸ்ரவேலரின் வரலாற்றிலும். உலகத்தின் எல்லா மக்களின் கலாச்சாரங்களிலும் மனிதனின் அடிப்படையான பாவமாக உருவ வழிபாடே காணப் படுகின்றது.

ஆகவேதான், உருவவழிபாட்டிலிருந்து விடுபட்டு மெய்யான ஜீவனுள்ள தேவனை அறிந்து வழிபடுதல் உண்மையான மனந்திரும்புதலுக்கு அடையாளமாகக் காணப்படுகின்றது (1 தெச. 1:9, 10). வேதபூர்வமான கிறிஸ்தவம் மெய்யான, ஜீவனுள்ள தேவனையே தனது போதனைகளின் அடிப்படை அம்சமாகக் கொண்டிருக் கின்றது. ஆகவேதான், 1689 விசுவாச அறிக்கையை வரைந்தளித்துள்ள நமது பெரியோர்கள் இவ்விரண்டாம் அதிகாரத்தில் அத்தேவனைப்பற்றி விளக்கியுள்ளனர். இங்கே, தேவனைப்பற்றி அளிக்கப்பட்டுள்ள விளக்கங் கள் இனிவரப்போகும் நான்காம் அதிகாரத்தில் விளக்கப்பட்டுள்ள, தேவன் தன்சிருஷ்டிகள் அனைத்தின் மீதும் கொண்டுள்ள இறை ஆண்மைபற்றிய கோட்பாடு களை நாம் அரவணைத்துக்கொள்ளத் துணைபுரிகின் றன.

பாரா 1 - *கடவுள் ஒருவராகவும் ஜீவனுள்ள மெய் யான தேவனாகவும் இருக்கிறார். அவர் தன்னிருப் பானவராயும் (அவர் தன்னுடைய இயல்புக்குத் தேவையான எல்லா வல்லமையையும் தன்னிடத்தில் இருந்தே பெற்றுக்கொள்வதோடு, புறத்திலிருந்து எதுவுமே தேவையில்லாதவராகவும் இருக்கிறார்), தன்னிருப்பிலும் முழுநிறைவிலும் எல்லையற்ற வராகவும் இருக்கிறார். அவரால் மட்டுமேயன்றி வேறொருவராலும் அவரது உள்ளியல்பைப் புரிந்து, அறிந்துகொள்ள முடியாது. அவர் தூய ஆவியான வரும், கண்ணிற்கு புலப்படாத உருவமற்றவரும், மாறுதலுக்குரிய மனித உணர்ச்சிகளும் (கோபம், வெறுப்பு, பேராசை, பாலியல், அன்பு போன்ற மனிதனை ஆளும் உணர்ச்சிகள்) அற்றவர்; அவர் ஒருவரே என்றும் உள்ளவராக (ஏனையோர் அவரிடத்திலிருந்தே ஜீவனைப் பெற்றுக் கொள்கிறார் கள்), மனிதன் அடையமுடியாத ஒளியின் மத்தியில் வாழ்கிறார்; அவர் மாறாதவர்; அளவிட முடியாதவர்; என்றுமுள்ளவர்; புரிந்து கொள்ளமுடியாதவர் (மனித னுடைய சிந்தனைகளுக்கும், அறிவிற்கும் அப்பாற்பட் டவர்); எல்லாம் வல்லவர்; எல்லாவிதத்திலும் எல்லை யற்றவர்; மிகப்பரிசுத்தர்; மிகுந்த ஞானமுள்ளவர்; பெருஞ்சுதந்திரம் உள்ளவர்; முழுமையானவர்; எல்லாக்காரியங்களையும் தனது மாறாத பெருநீதி யுள்ள சித்தத்தின் திட்டப்படி, தன் சுயமகிமைக் காகவே செய்பவர்; அவர் பேரன்பும், பெரருளும், பெருங்கருணையும், சகிப்புத்தன்மையும், அளவற்ற நற்குணமும், உண்மையும் உள்ளவர்; அநீதியையும், ஒழுங்குமீறுதலையும், பாவத்தையும் மன்னிக்கிறவர்; ஊக்கத்தோடு தம்மை நாடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறவர்; அதேநேரத்தில், அவர் குற்றப்பழிகளை யும், குற்றவாளிகளையும் எவ்விதத்திலும் விட்டுவைக் காது, எல்லாப்பாவங்களையும் வெறுத்தொதுக்கி, பெருநீதியோடும் பயங்கரத்தோடும் நியாயந்தீர்ப்பவர்.*

*ஆதி 17:1; யாத்தி. 3:14; 34:6,7; உபா. 4:15,16; 6:4 1 இராஜா. 8:27; நெகே. 9:32,33; சங். 5:5,6; 90:2; 115:3; நீதி. 16:4; ஏசா. 6:3; 46:10; 48:12; எரேமி. 10:10; 23:23,24; நாகூம் 1:2,3; மல். 3:6; யோவா. 4:24; ரோமர் 11:36; 1 கொரி.*

*8:4,6; 1 தீமோ. 1:17; எபிரே. 11:6.*

இவ்விசுவாச அறிக்கையின் ஏனைய அதிகாரங்களைப் போலவே இவ்வதிகாரமும் முதலாவது பாராவில் இவ்வதி காரத்தின் போதனையை சுருக்கமாக விளக்கிவிட்டு, ஏனைய பாராக்களில் அப்போதனையை மேலும் படிப்படி யாக விளக்கமாகத்தருகின்றன. முதலாவது பாராவை நாம் மிக விளக்கமாகப்படிக்க வேண்டியது அவசியம். அதேவேளை, இப்பாராவில் தரப்பட்டுள்ள போதனை யோடு எந்தவிதத்தில் இவ்வதிகாரத்தின் ஏனைய பாராக் கள் தொடர்புள்ளவையாக உள்ளன என்றும் நாம் படித் தல் அவசியம்.

இவ்வதிகாரத்தின் முதல் பாரா கடவுளைப்பற்றிய பொது வான விளக்கத்தை அளிக்கிறது. இதன் இரண்டாம் பாரா, தன்னுடைய சிருஷ்டிகளுடன் கடவுள் கொண் டுள்ள உறவை விளக்குகிறது. மூன்றாம் பாரா, கடவுள் பிதா, குமாரன், ஆவியாக இருக்கிறார் என்று போதிக் கின்றது.

**1. கடவுளின் குணாதிசயங்கள் (பாரா 1)**

*"கடவுள் ஒருவராகவும் ஜீவனுள்ள மெய்யான தேவனாகவும் இருக்கிறார்."*

*அ. கடவுள் ஒருவரே*

வேதம் கடவுள் ஒருவரே என்று போதிக்கும்போது, பல கடவுள்கள் இல்லை என்பதை உறுதிப்படுத்து கிறது (உபா.6:4; ஏசா. 46:9; 1 தீமோ. 2:5). பல தெய்வ வழிபாடு பிசாசின் கண்டுபிடிப்பு. "ஆதியிலே தேவன்", என்றே வேதம் ஆரம்பிக் கிறது. திரித்துவப் போதனையை வேதத்தில் மட்டுமே காண்கிறோம். இதனை வேறு எந்த சமயத்திலும் பார்க்க முடியாது. ஆகவே, பல தெய்வ வழிபாடும், திரித்துவப்போதனையோடு இந்து மத மும்மூர்த்திகளை இணைத்துப் போதிக்கும் முறையும் வேதத்திற்கு எதிரானது. இந்து மதம் என்றுமே ஒரு தெய்வ வழிபாட்டைக் கொண்டிருக்கவில்லை. அவ்வாறு வாதிடுபவர்கள் சுயநல நோக்கில் செயல்படுகிறார்களே தவிர கிறிஸ்துவை மகிமைப்படுத்தும் நோக்கத்தைக் கொண்டிருக்கவில்லை.

> பல தெய்வ வழிபாடும், திரித்துவப்போதனை யோடு இந்து மத மும்மூர்த்திகளை இணைத்துப் போதிக்கும் முறையும் வேதத்திற்கு எதிரானது.

*ஜீவனுள்ளவர்:* ஒரே தேவனாகிய கடவுள் ஜீவனுள்ளவர் என்று வேதம் போதிக்கின்றது. வேதம் உருவவழி பாட்டைப்பற்றிப் பேசும்போது அவ்வுருவங்கள் உயிர ற்றவை என்று தெரிவிக்கின்றது (சங். 115). இதற்கு மாறாக நமது தேவன் ஜீவனுள்ளவராக இருக்கிறார். நமது ஆழமான விருப்பங்களையும், ஆவியின் தேவை களையும் வெறும் சிலைகளால் தீர்க்க முடியாது. பவுலும், பர்னபாவும், உருவங்களை வழிபட்ட மக்களைச் சந்தித்த போது ஜீவனுள்ள தேவனைப்பற்றி அவர்களுக்கு வைராக்கியத்தோடு எடுத்துச்சொல்ல முயன்றனர் (அப்போஸ். 14:15).

*உண்மையுள்ளவர்:* உருவவழிபாட்டிற்கெல்லாம் காரண மாக இன்னுமொரு உயிருள்ள ஜீவனாக பிசாசு காணப்படுகின்றான். அவனை இவ்வுலகத்தின் தேவன் என்று வேதம் அழைக்கிறது (2 கொரி. 4:4). பிசாசான வன் இவ்வுலகத்து மனிதர்களுடைய கண்களைக் குருடாக்கி கர்த்தரை அறிந்து கொள்ள முடியாமல் வைத்திருக்கிறான். பிசாசு தனக்குக்கீழ் பணிபுரியும் பல ஊழியர்களைக் கொண்டிருக்கிறான். சாத்தானால் பேசமுடியும். அவன் பேசுகிறபோது பொய்யைத்தவிர வேறெதையும் பேசுவதில்லை. ஆகவேதான், வேதம் அவனைப் பொய்களின் தகப்பன் என்று அழைக்கின்றது (யோவான் 8:44). ஆனால், தேவன் உண்மையுள்ளவராய் இருக்கிறார். அவரைத்தவிர வேறு மெய்யான, ஜீவனுள்ள தேவன் இல்லை (1 கொரி. 8:4-6; ஏசாயா 45:21, 22).

**ஆ. கடவுளின் சுதந்திரம்.**

*"அவர் தன்னிருப்பானவராயும் (அவர் தன்னுடைய இயல்புக்குத் தேவையான எல்லா வல்லமையையும் தன்னிடத்தில் இருந்தே பெற்றுக்கொள்வதோடு, புறத்திலிருந்து எதுவுமே தேவையில்லாதவராகவும் இருக்கிறார்), தன்னிருப்பிலும் முழுநிறைவிலும் எல்லையற்றவரா கவும் இருக்கிறார்."*

இவ்வார்த்தைகளைப்பயன்படுத்துவதன் மூலம் நமது விசுவாச அறிக்கை வரலாற்றில் தோன்றிய இறையியல் விளக்கங்களுடன் தன்னை இணைத் துக்கொள்கின்றது. ஆதி சபை வரலாற்றை நாம் படித்துப் பார்க்கின்ற போது திரித்துவப்போதனைகள் பற்றியும், கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மை பற்றியும் பல போலிப் போதனைகள் எழுந்திருந்ததை நாம் கவனிக்கிறோம். இத்தகைய போலிப் போதனைகளை எதிர்த்து, சரியான வேதபூர்வமான வார்த்தைகளைப் பயன்படுத்தி முறையான இறையியல் போதனைகளை திருச்சபை எழுத்தில் வடிக்க நேர்ந்தது.

விசுவாச அறிக்கையின் இவ்வசனம், எல்லையற்ற நம் தேவனின் தனித்துவமான தன்மையைப்பற்றி விளக்கு கிறது. "தன்னிருப்பானவர்" என்ற பதம் கடவுள் இருக்கிறார் என்பதை உணர்த்துகின்றது. அவர் தனக்குள் பூரணமானவராகவும், தனது ஜீவனுக்காக எந்தவொரு உயிரினத்திலும் தங்கியிராதவராகவும் இருக்கிறார். "பிதா தம்மில் தாமே ஜீவனுடையவரா யிருக்கிறதுபோல், குமாரனும் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள் செய்திருக்கிறார்" (யோவான் 5:26). கடவுள், தமது ஜீவனுக்காக தமக்கு வெளியில் எந்தவொரு பொருளிலும், உயிரினத்திலும் தங்கியிருக்கவில்லை. அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம் (அப்போஸ். 17:28). நமது ஜீவனுக்காக நாம் கடவுளில் தங்கியிருக்கிறோம். கடவுள் இல்லாமல் நாம் இருக்க முடியாது. ஆனால், கடவுள் தமது சிருஷ்டிகளில் இருந்து சுதந்திரமாக இயங்குகிறார். கடவுள் இருக்கிறவராய் இருக்கிறார். அவர் எல்லை யற்றவராய், எந்தவித பாதிப்பும் அற்றவராய் இருக்கிறார்.

அவர் முழுப்பூரணமுள்ளவராய் இருக்கிறார். அவரிடம் உண்மையற்றதென்றொன்றில்லை.

மோசேக்கு கடவுள் தனது பெயரை அறிவித்தபோது (யாத். 3:14) நான் "இருக்கிறவராக இருக்கிறேன்" என்று கூறினார். பழைய ஏற்பாட்டு மக்கள் கடவுள் மேல் வைத்திருந்த மரியாதையின் காரணமாகவும், தேவ பயத்தின் காரணமாகவும் இப்பெயரை ஒருபோதும் பயன்படுத்தவில்லை. இப்பெயருக்கான விளக்கம் கடவுளிலேயே தங்கியிருக்கிறது. அவரைப்பற்றி அவரால் மட்டுமே விளக்க முடியும். அவரது குணாதிசயங்களே அவரைப்பற்றி நமக்குப்போதிக்கின்றன. அவர் இருக்கிறார். அவர் ஆணையிடுகிறார். அவர் செயலாற்றுகிறார். தனது செயல்கள் அனைத்தையும் செய்து முடிக்கக்கூடிய தன்னிறைவுடையவராக கடவுள் இருக்கிறார். அவர் எவரிடத்திலிருந்தும் எந்தவித ஆலோசனையையும் பெறுவதில்லை. அவர் எவரிலும் தங்கியிருக்கவில்லை. தனது பரிசுத்த சித்தத்தை தனது மகிமைக்காக சுதந்திரமாக அவர் நிறைவேற்றுகிறார். "சகலமும் அவராலும், அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது. அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமேன்" (ரோமர் 11:36).

பவுல், அத்தேனே பட்டணத்தில் உருவவழிபாட்டில் ஈடுபட்டிருந்த மக்களைச்சந்தித்தபோது, "உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராக இருக்கிறபடியால் கைகளால் கட்டப்பட்ட கோவிலில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை. எல்லோருக்கும் ஜீவனையும், சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானது போல், மனிதர் கைகளினால் பணிவிடை கொள்கிறதுமில்லை" என்று அறிவித்தார். (அப்போஸ். 17:24, 25).

**இ. கடவுளின் புரிந்துகொள்ள முடியாத தன்மை.**

*"அவரால் மட்டுமேயன்றி வேறெருவராலும் அவரது உள்ளியல்பைப் புரிந்து, அறிந்துகொள்ள முடியாது."*

தன்னைப்பற்றி கடவுளுக்கு மட்டுமே பூரணமாகத் தெரியும். தனது தெய்வீகத்தை அவர் மட்டுமே பூரணமாக புரிந்து கொண்டிருக்கிறார். சிருஷ்டியாகிய மனிதனால் கடவுளைப் புரிந்து கொள்ள முடியாது. அவனால் கடவுளைக் கண்டுபிடிக்க முடியாது. கடவுளைப்பற்றிய ஒரு கோட்பாட்டை வகுத்து, அவரைப்பற்றி விஞ்ஞான ரீதியிலான எந்தவொரு ஆய்வையும் அவனால் நடத்த முடியாது. உண்மையில், அவன் இயற்கையாகவே அவர் இருப்பதை ஏற்றுக்கொள்ளமாட்டான். (ரோமன் 1:28). அவர் தம்மைப்பற்றி நமக்கு வெளிப்படுத்தினால் மட்டுமே நாம் அவரை அறிந்து கொள்ள முடியும். "பிதாவே! வானத்துக்கும் பூமிக்கு ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உமது திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது. சகலமும் என் பிதாவினால் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது; பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான்; குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர, வேறொருவனும் பிதாவை அறியான்." (மத்தேயு 11:25-27).

தேவன், தம்மை நமக்கு வெளிப்படுத்தல் மூலம் அறியத் தந்திருந்தபோதும், நம்மால் அவரை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது. அதாவது, தேவனைப்பற்றிய அனைத்து அறிவையும் நாம் கொண்டிருக்கவில்லை. அவரைப்பற்றி நமக்குத்தெரியாதது ஒன்றுமே இல்லை என்று நம்மால் கூறமுடியாது. வேதத்தில் தேவனைப்பற்றி நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள வெளிப்படுத்தல் உண்மையானதும் நம்பத்தகுந்துமாகும். அதேவேளை, கடவுளைப்பற்றி ஒன்றுவிடாமல் எல்லாவற்றையும் வெளிப்படுத்தல் நமக்குப் போதிகின்றது என்று கூறிவிட முடியாது. தன்னைப்பற்றிக் கடவுள் வெளிப்படுத்தியபோது, நாம் அறிந்துகொள்ள அவசியமான வற்றை மட்டுமே அவர் வெளிப்படுத்தினார். மோசேக்கு அவர் தன்னை வெளிப்படுத்தியபோது, தனது கரங்களால் தன்னை மறைத்து, தனது முகத்தை மோசே பார்க்கமுடியாமல் செய்தார். (யாத்தி. 33:18-34:8). இறுதியில் தேவன் தன்னைக் கிறிஸ்துவுக்குள்ளாக முழுமையாக வெளிப்படுத்தினார். (மத்தேயு 13:10-17). நாம் கிறிஸ்துவைப் பார்க்கும்போது, கடவுளைப் பார்க்கிறோம். ஆனால், கடவுளின் தெய்வீகம், மனிதரூபத்தில் வந்த சேவகனில் மறைந்து காணப்பட்டது. (கொலோ. 1:19; 2:9; பிலி. 2:5-11). நம்மத்தியில் காணப்படும் தேவனின் இரஜ்யமும்கூட ஒருவிதத்தில் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாதவிதத்திலேயே காணப்படுகின்றது. ஏனெனில், தேவ இராஜ்யத்தை நாம் இன்னும் முழுமையாகப் பார்க்கவில்லை. அது முழுமையாக நிறைவேறும் நாள் இன்னும் வரவில்லை. நாம் இப்போது, கிறிஸ்துவினால் நிறைவேற்றப்பட்ட மீட்பின் அடிப்படையில், அவரது அப்போஸ்தலர்களால் பிரசங்கிக்கப்பட்ட சுவிஷேச வித்து இவ்வுலகில் விதைக்கப்பட்டு வளர்ந்து வருவதையே பார்க்கிறோம். ஆனால் அதை நாம் நமது கண்களால் காண்பதில்லை. நம்மால் அதைப் புரிந்து கொள்ள முடியாதபோதும் விசுவாசத்தின் மூலமாக அதை நம்புகிறோம். கடவுளை நாம் பூரணமாகப் புரிந்துகொள்ள முடியாதபோதும், விசுவாசத்தின் மூலமாக விசுவாசவாழ்க்கை வாழ்ந்து வருகிறோம். விசுவாசம் இல்லாமல் கடவுளை ஒருவரும் ஆராதிக்க முடியாது. அவரிடம் வருபவர்கள் அவர் இருக்கிறார் என்று நம்பி, விசுவாசத்துடன் அவரை நாடவேண்டியது அவசியம். தன்னை அவ்வாறு நாடி வருபவர்களை அவர் ஆசீர்வதிக்கிறார். (எபிரே. 2:4; 2 கொரி. 5:7; எபிரே. 11:6). நாம் கிறிஸ்துவுக்குள் இறந்து, உயிர்த்தெழுந்து, புதிய சரீரத்தைப்பெற்று புதிய உலகத்தில் பாவமற்று பூரணமாக இருக்கும் காலத்திலும்கூட அளவற்ற, பூரணமான கடவுளைப்பற்றிய அனைத்தையும் நாம்

> தன்னைக் கடவுள் வெளிப்படுத்தியபோது, நாம் அறிந்துகொள்ள அவசியமானவற்றை மட்டுமே அவர் வெளிப்படுத்தினார்.

தெரிந்து கொள்ளப்போவதில்லை. அவரை நாம் எந்த விதமான பாவக்கலப்புமின்றி தெரிந்து கொள்வோம். இவ்விதத்திலேயே அவரை நாம் பூரணமாகத் தெரிந்து கொள்வோமேயன்றி இதைவிட விரிவாக அல்ல. (சங்கீதம் 145:3; ரோமர் 11:33).

**ஈ. கடவுளின் ஆவிக்குரிய தன்மை**


*"அவர் தூய ஆவியானவரும், கண்ணிற்கு புலப்படாத உருவமற்றவரும், மாறுதலுக்குரிய மனித உணர்ச்சிகளும் (கோபம், வெறுப்பு, பேராசை, பாலியல், அன்பு போன்ற மனிதனை ஆளும் உணர்ச்சிகள்) அற்றவர்; அவர் ஒருவரே என்றும் உள்ளவராக (ஏனையோர் அவரிடத்திலிருந்தே ஜீவனைப் பெற்றுக் கொள்கிறார்கள்), மனிதன் அடையமுடியாத ஒளியின் மத்தியில் வாழ்கிறார்;"*

இவ்வசனங்கள், கடவுளை அவர் சிருஷ்டித்துள்ளவற்றிலிருந்து மேலும் வேறுபடுத்திக் காட்டும் நோக்கத்துடன் எழுதப்பட்டவை. கடவுள் ஆவியானவர் என்றும் அவரை ஆராதிப்பவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரை ஆராதிக்க வேண்டும் என்றும் இயேசு போதித்தார். (யோவான் 4:24). தாம் படைத்துள்ள அநித்தியமான இவ்வுலகத்துப் பொருட்களிலிருந்து கடவுள் வேறுபட்டு நிற்கிறார் என்பதையே அவரது ஆவிக்குரிய தன்மை போதிக்கின்றது. ஆகவே, "நித்தியமாகவும், அழிவில்லாமலும் அதரிசனமுள்ள ராஜனுமாய், தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனாய் இருக்கிறவருக்கு, கனமும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமேன்." (1 தீமோ. 1:17). ஏனைய பொருட்களை விஞ்ஞானரீதியில் ஆராய்ந்து நாம் கண்டுபிடிக்க முயற்சிப்பதுபோல் கடவுளை ஆராய்ந்து கண்டுகொள்ள முடியாது. தேவனை ஒருவனும் ஒருக்காலுங் கண்டதில்லை. பிதாவின் மடியில் இருக்கிற ஒரேபேரான குமாரனே அவரை வெளிப்படுத்தினார். (யோவான் 1:18). ஆவியான இக்கடவுள் மட்டுமே தன்னை நாம் தெரிந்து கொள்ளக்கூடியவிதத்தில் வெளிப்படுத்தக் கூடியவராக இருக்கிறார். இதேயே அவர் தனது குமாரனாகிய கிறிஸ்துவின் மூலமாக செய்துள்ளார். அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேருமானவர். (கொலோ. 1:15). கடவுள் ஒருவரே தம்மைப்போல ஒரு தற்சுரூபத்தை உருவாக்கக்கூடிவர். இதை அவர் தனது சிருஷ்டியின் மூலமாக, மனிதனை தனது சுரூபத்தில் தோற்றுவித்ததன் மூலமாக செய்துள்ளார். அதுமட்டுமல்லாமல் தனது குமாரனை இவ்வுலகுக்கு அனுப்பியதன் மூலமும், தனது மக்களின் பரிசுத்தமாக்குதலின் மூலமாகவும் தனது சுரூபத்தைக் கடவுள் வெளிப்படுத்தியுள்ளார். ஆனால், கடவுள் ஆவியாகவும், அதரிசனமானவராகவும் இருப்பதால், மனிதர்கள் அவரைப்போன்ற உருவங்களைத்தோற்றுவிப்பதைக் கடவுள் தடை செய்துள்ளார். இரண்டாம் தடவையாக பத்துக்கட்டளைகளைக் கொடுப்பதற்குமுன், மோசே இரண்டாம் கட்டளையின் அடிப்படையில் இஸ்ரவேலர்களை எச்சரித்தார். கடவுளைப்பார்த்த ஒருவரும் இல்லாததால் கடவுளைப் போன்ற தோற்றத்தில் உருவங்களை ஏற்படுத்துவது தவறு என்று எச்சரித்தார். (உபாகமம் 4:15-18).

> **கடவுள் ஆவியாகவும், அதரிசனமானவராகவும் இருப்பதால், மனிதர்கள் அவரைப் போன்ற உருவங்களைத் தோற்றுவிப்பதைக் கடவுள் தடை செய்துள்ளார்.**

விசுவாச அறிக்கை, கடவுளுக்கு சரீரமோ, மனித உணர்ச்சிகளோ, அங்கங்களோ இல்லை என்று போதிப்பதன் மூலம், மனிதரூபத்தில் கடவுள்களைத் தோற்றுவிக்கும் புறமதச்செயல்களைக் கண்டிக்கிறது. கிரேக்கர்களும், ரோமர்களும் வழிபட்ட கடவுள்கள் தங்களுடைய உணர்ச்சிகளுக்குப் பேர் போனவர்கள். இந்து மதத்திலும்கூட இத்தகைய கடவுள்கள் இருப்பதை நாம் அறிவோம். காளியின் கொடூரமும், சிவனின் நெற்றிக்கண் கோபமும் நாமறிந்ததே. அதுமட்டுமல்லாமல் இப்புறமதக்கடவுள்கள் மனிதனைப் போன்ற பாவ எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் கொண்டவர்களாக வர்ணிக்கப்படுகின்றனர். சிவனுக்கும், கிருஷ்ணனுக்கும் மற்றவர்களின் மனைவியரின் மேல் உள்ள மோகத்தை புராணங்கள் தெரிவிக்கின்றன. முருகனுக்கு ஒரு மனைவி போதாது. இவையெல்லாம் மெய்யான தெவனோடு சம்பந்தமில்லாத பாவஉணர்வுகள். இருந்த போதும் வேதத்தில் கடவுளின் கண்களைப் பற்றியும், செவிகளைப்பற்றியும், கேட்கும் தன்மையைப் பற்றியும் நாம் வாசிக்கிறோம். இதை விளக்கும் சார்ள்ஸ் ஹொட்ஜ் (Charles Hodge). "மனிதனுடைய பலவீனத்தின் காரணமாகவும், மனித உணர்வுகள் மனிதனின் அங்கங்களினூடாக வெளிப்படுவதன் காரணமாகவும், அடையாள மொழியினூடாக வேதம் மனிதன் புரிந்து கொள்ளும் விதத்தில் கடவுளின் செயல்களை மனித உருப்புகளின் மூலமாக வெளிப்படுவதாகத் தெரிவிக்கின்றன" என்கிறார். ஆதாவது, வேதம் மனிதனுக்குப் புரியக்கூடியவிதத்தில் மனித மொழியைப் பயன்படுத்தி, கடவுளின் ஆவிக்குரிய செயல்களை விளக்குகிறது. இதை ஆங்கிலத்தில் "anthropomophisms" என்று அழைப்பர். கடவுளின் செயல்களை மனித குணாதிசயங்களின் மூலமாக விளக்குதல் என்பது இதற்குப் பொருள். ஆகவேதான் கடவுள் நமது ஜெபங்களைத் தனது "காதுகளால்" கேட்பதாகவும், நமது செயல்களைத் தனது "கண்களால்" பார்ப்பதாகவும், ஆராய்வதாகவும், தமது "முகத்தை" நாம் பார்க்க முடியாதபடி மறைத்துக் கொண்டதாகவும், வரலாற்றில் தனது "கரங்களின்" வல்லமையால் அவர் செயல்படுவதாகவும் நாம் வேதத்தில் வாசிக்கிறோம். இவை ஆவிரூபமான, அங்கங்களற்ற கடவுளின் செயல்களை மனித மொழியில் விளக்குவதாகும்.

*"அவர் ஒருவரே என்றும் உள்ளவராக (ஏனையோர் அவரிடத்திலிருந்தே ஜீவனைப் பெற்றுக் கொள்கிறார்கள்), மனிதன் அடையமுடியாத ஒளியின் மத்தியில் வாழ்கிறார்;"* எனும் வாசகங்கள் 1 தீமோ. 6:15, 16 ஆகிய வேத வசனங்களை எதிரொலித்து கடவுளுக்கே எல்லா மகிமையையும் செலுத்துகின்றன. (வளரும்)



# சிறந்த பிள்ளை வளர்ப்பு

பிள்ளை வளர்ப்பின் அவசியத்தை உணராத குடும்பங்கள் இருக்கமுடியாது. தங்களுடைய பிள்ளைகள் தாம் தலை நிமிர்ந்து நடக்கக்கூடிய விதத்தில் நடக்க வேண்டும் என்பதுதான் ஒவ்வொரு பெற்றோரின தும் கனவாக இருக்கின்றது. ஆனால், வெறும் கனவும், ஆசையும் மட்டும் பிள்ளைகளை நல்ல முறையில் வளர்த்துவிடாது. பிள்ளை வளர்ப்பில் தமது பொறுப்புக்களை உணர்ந்து அதற்கான நடவடிக்கைகளை எடுக்காத பெற்றோர்கள் தேவ னின் ஆசீர்வாதத்தைத் தங்களுடைய குடும்பங் களில் காண முடியாது.

பிள்ளை வளர்ப்பின் அவசியத் தைக்குறித்தும், அதற்காகப் பெற்றோர்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் நல்ல ஆலோசனை களை ஜே. சீ. ரைல் தனது “சிறந்த பிள்ளை வளர்ப்பு” என்ற நூலில் வழங்கியுள்ளார். சென்னையைச் சேர்ந்த தமிழ் பாப்திஸ்து வெளியீடுகள் நிறுவனம் இதனை ஆங்கில மூலத்திலிருந்து (The Duties of the Parents) தமிழில் மொழி பெயர்த்து ஐம்பது பக்கங்களில் வெளியிட்டுள் ளார்கள்.

**சிறந்த பிள்ளை வளர்ப்பு**
**ஜே. சீ. ரைல்**
**விலை: 8.00 ரூபாய் (இந்தியா)**
*நூல் கிடைக்குமிடம்:*
**தமிழ் பாப்திஸ்து வெளியீடுகள்**
**4 கெல்லீஸ் வீதி, கீழ்ப்பாக்கம்**
**சென்னை 600 010**

ஜோன் சார்ள்ஸ் ரைல் (**1816-1900**) ஒரு அருமை யான பிரசங்கி. இங்கிலாந்தில் சீர்திருத்தவாத பிரசங்கியாக, லிவர்பூலில், இங்கிலாந்து திருச்சபை யில் போதகராக இருந்த ரைல் அநேக நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இவற்றில் இந்நூலும் ஒன்று. ரைல் இந்நூலில் பிள்ளை வளர்ப்புக்கான பதினேழு சிறந்த அறிவுரைகளை விளக்கமாக வழங்கியுள்ளார். ரைலின் போதனையின்படி பிள்ளைகள் தானாக வளர முடியாது. அவர்களைப் பெற்றோர்கள் பயிற்றுவிக்க வேண்டும். இப்பதி னேழு அறிவுரைகளும் பிள்ளைகளை எப்படிப் பயிற்றுவிப்பது என்பது பற்றியே எடுத்துக்கூறுகின் றன.

இன்று அநேக கிறிஸ்தவ பெற்றோர்களுக்கு பிள்ளை வளர்ப்பில் அதிக அனுபவம் இல்லா திருக்கின்றது. பிள்ளை வளர்ப்பில் அநேகர் பல தவறான செயல்களையும் செய்து வருகிறார்கள். பிள்ளை வளர்ப்பு என்பது ஒவ்வொரு நாட்டிலு முள்ள பாடசாலைகள், கல்லூரிகளின் பொறுப்பு என்று எண்ணிவருகிறவர்கள்தான் எத்தனைபேர். பிள்ளை வளர்ப்பு பற்றியும் வேதம் போதிக்கின் றதா? என்று கேட்கும்விதத்திலேயே அநேக பெற் றோர்கள் நடந்து வருகிறார்கள். இதற்கெல்லாம் காரணம் பிள்ளை வளர்ப்பு பற்றி அவர்கள் அறியாமலிருப்பதுதான். அதற்கும் தமக்கும் சம்பந்த மில்லை என்பது போலவே போதகர்களும், திருச் சபைகளும்கூட நடந்து வருகின்றார்கள். இந் நிலைமை மாறவேண்டும். இது மாறவேண்டுமா னால் அதற்கு இரண்டு விட யங்களில் கிறிஸ்தவர்களுக்கு தெளிவு இருக்க வேண்டும்.

(1). முதலாவதாக, கிறிஸ்தவம் என்பது பரலோகத்திற்குப் போவதற்காக மட்டும் கிறிஸ் துவை அறிந்து கொள்வது மட்டும்தான் என்ற தவறான எண்ணத்தை நாம் விட்டுவிட வேண்டும். இந்தவிதத்திலேயே தமிழர்கள் மத்தியில் கிறிஸ் தவம் அறிமுகப்படுத்தப்படு கின்றது. கிறிஸ்து கொடுக்கும் நித்திய ஜீவனுக்கும் நமது உலகவாழ்க்கைக்கும் தொடர்பில்லை என்பது போலவே பலர் வாழ்ந்து வருகின்றார்கள். இதற்குக்காரணம், இரட்சிப்புப் பற்றிய சரியான போதனை கொடுக்கப்படாததே. ஒருவரை கிறிஸ்து இரட்சிக்கும்போது, அந்நபர் தனது வாழ்க்கையின் ஒவ்வொரு அங்கத்தையும் கிறிஸ்துவின் வேதத்தின் அதிகாரத்திற்குக் கீழ் கொண்டுவர வேண்டுமென்று அவர் எதிர்பார்க் கிறார். ஒரு கிறிஸ்தவனின் வாழ்க்கை கிறிஸ்துவின் முழுமையான ஆளுகையின் கீழ் வர வேண்டும். அதன்படி அவனது சொந்த வாழ்க்கையும், குடும்ப வாழ்க்கையும் கிறிஸ்துவின் வேத அதிகாரத்தின் கீழ் வரல் அவசியம். கிறிஸ்துவில் நாம் வைக்கும் விசுவாசம் நமது வாழ்க்கையின் எல்லாப்பகுதி களையும் பாதிக்கின்றது. இந்த உண்மை போதிக்கப் படாததாலும், புரிந்து கொள்ளப்படாததாலுமே இன்று நம்மத்தியில் காணப்படும் கிறிஸ்தவத்திற்கும் நமது குடும்ப வாழ்க்கைக்கும் எந்தத்தொடர்புமே இல்லாதுபோல் காணப்படுகின்றது.

(2). இரண்டாவதாக, <u>பிள்ளைகள் வளர்க்கப்பட வேண்டும்</u> என்ற உண்மை பெற்றோர்களுக்கு உறைக்க வேண்டும்; அதுவும் அவர்கள் பெற்றோர்களால் வளர்க்கப்பட வேண்டும் என்ற சிந்தனை அவர்களுக்கு எழ வேண்டும். தங்களுடைய கடமையைத் தட்டிக்கழித்துவிட்டு தாதிகளிடத்திலும்; உறவினர்களிடத்திலும் தங்கள் பிள்ளைகளை வளரும்படி விட்டுவிடும் பெற்றோர்களால் பிள்ளைகளை ஒருபோதும் பயிற்றுவிக்க முடியாது. பெற்றோர்கள் முதலில் இது தங்களுடைய பொறுப்பு என்பதை உணர வேண்டும். ஆகவே, பிள்ளை வளர்ப்பில் அக்கறைகாட்டும்படி பெற்றோர்கள் முதலில் திருந்த வேண்டியது அவசியம். தேவன் கொடுத்திருக்கும் இப்பொறுப்பிற்கு அவர்கள் தேவனுக்கு முன் பதில் கூற வேண்டும் என்ற உண்மையையும் அவர்கள் உணர வேண்டும். பணம் வேண்டும், வாழ்க்கையில் வசதி வேண்டும் என்பதற்காக தங்கள் பிள்ளைகளை பூனைக்குட்டிகளைப்போல் அங்கும் இங்குமாக வளரவிடுவது கிறிஸ்தவப் பெற்றோர்கள் செய்யும் காரியமல்ல.

பவுல் எபேசியருக்கு எழுதியுள்ள நிருபத்தில் கூறியுள்ளதை நினைவு கூறுங்கள். "பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளை கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக." (எபேசி.6:4) என்று பவுல் கூறுகிறார். சாலமோன் நீதிமொழிகளில், "பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து" என்று கூறுகிறார்.

இனி ரைல் எழுதியுள்ள நூலுக்கு வருவோம். இந்நூலில் ரைல் தருகின்ற பதினேழு அறிவுரைகளும் வேதபூர்வமான சிறப்பான அறிவுரைகள். இவற்றைப்பெற்றோர்கள் விசுவாசத்துடனும், கருத்துடனும் பயன்படுத்தினால் தங்கள் பிள்ளைகளை நல்லபடியாக வழிநடத்தியவர்களாவார்கள். இவற்றைப்போதகர்கள் தங்கள் பிரசங்கத்தில் பயன்படுத்தி விளக்கமாக சபைகளில் நிச்சயம் போதித்தல் அவசியம். அத்தோடு, தங்கள் சபைக் குடும்பங்கள் இந்நூலை வாசிக்குமாறும் வற்புறுத்த வேண்டும். பிள்ளை வளர்ப்பில் பிரச்சனைகளை சந்திக்கும் குடும்பங்களுக்கு ஆலோசனைகூற இந்நூலைப் போதகர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும், புதிதாக திருமணம் செய்துகொள்ள விருப்பவர்களுக்கு போதகர்கள் திருமணம்பற்றி ஆலோசனைகள் கூறும்போது இந்நூலை நிச்சயம் அவர்கள் வாசிக்குமாறும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இறுதியாக, ரைல் கூறும் பதினேழு அறிவுரைகளில் ஒன்றை மட்டும் நான் இங்கே குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன். பிள்ளை வளர்ப்பில் அக்கறையுள்ளவர்கள், "உங்களுடைய முன்மாதிரி அவர்களை எப்படிப்பாதிக்கிறது என்பதை மனதில் கொண்டு அவர்களை பயிற்றுவியுங்கள்" என்று ரைல் கூறுகிறார். "குழந்தைகள் காதுகளினால் கேட்பதைவிட கண்களினால் காண்பவற்றால் அதிகம் கற்கிறார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள். ஞாபக சக்தியைவிட வலிமையான கொள்கை மற்றவர்களைப்போல நடப்பதாகும். காதால் கேட்பதைவிட, அவர்கள் தங்கள் கண்களால் பார்ப்பவையே அவர்களுடைய வாழ்க்கையில் அதிக பாதிப்பை ஏற்படுத்துகிறது. எனவே குழந்தைகளுக்கு முன்னால் நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதில் கவனமாக இருங்கள்." என்று கூறும் ரைல், "குழந்தைகளுக்கு முன்னால் பாவம் செய்பவன் இரண்டு மடங்கு பாவம் செய்கிறான்" என்பது உண்மையான பழமொழி என்று நினைவுறுத்துகிறார். "குழந்தைகள் எதையும் விரைவாக கவனிப்பார்கள். மாய்மாலமானதை அவர்கள் எளிதில் கவனிப்பார்கள். நீங்கள் உண்மையில் என்ன நினைக்கிறீர்கள், எதை உணர்கிறீர்கள் என்பதை அவர்கள் விரைவில் கண்டு பிடிப்பார்கள். உங்களுடைய வழிகளையும் கருத்துக்களையும் விரைவில் பின்பற்றுவார்கள்; தந்தை எப்படியோ மகனும் அப்படியே என்பதை நீங்கள் பொதுவாகவே காணலாம்."

ரைலின் இவ்வார்த்தைகள் எத்தனை பொருள் பொதிந்தவை. நாம் என்ன செய்கிறோம், எவ்வாறு வாழ்கிறோம், என்பதில் அக்கறையெடுக்காமல் பிள்ளை வளர்ப்பில் ஈடுபடுவதெப்படி? நமது பிள்ளைகளின் வளர்ச்சியில் பெரும்பங்கு நமது கைகளில் இருக்கின்றது என்பதை பெற்றோர்கள் உணரும்வரை அவர்களுடைய பிள்ளைகள் சிறப்பாக, கிறிஸ்துவுக்காக வளர முடியாது.

## ஐரோப்பா, வட அமெரிக்கா, கனடா, மலேஷியா, சிங்கப்பூர் மற்றும் மத்தியகிழக்கு நாடுகளில் வாழும் வாசகர்களுக்கு ஒரு வேண்டுகோள்

**1999** ஆம் ஆண்டு முதல் பத்திரிகைக்கு சந்தா அறிமுகப்படுத்தப்படுகிறது. தொடர்ந்தும் பத்திரிகையைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறவர்கள் கீழே தரப்படும் சந்தா விபரப்படி இவ் வருடத்திற்கான [**1999**] சந்தாவைத் தயவுடன் அனுப்பி வைக்கவும்.

| | |
|---|---|
| ஒரு வருட சந்தா | **NZ $16.00** [தபால் செலவு உள்ளடங்கியது]<br>[வங்கிக் காசோலைகளை நியூசிலாந்து டாலரில் அனுப்பவும்] |
| அனுப்ப வேண்டிய முகவரி: | Bible Lamp, P O Box 62 159, Sylvia Park<br>Auckland, New Zealand. |

(6 ம் பக்கத் தொடர்ச்சி)

அனுபவிக்க முடியாது. இரண்டாவதாக, இருவரும் கிறிஸ்தவர்களாக இருந்தால்தான் கிறிஸ்துவிற்கு அடிபணிந்து, அவர்கள் கிறிஸ்தவக் குடும்பத்தை நடத்த முடியும். இருவரும் ஒரே தேவனை ஆராதிக்காவிட்டால், ஒரே சத்தியத்தை விசுவாசிக்காவிட்டால் குடும்பத்தில் பெரும் பிரச்சனைகள் தோன்றுவதைத் தவிர்க்க முடியாது. அதுமட்டுமல்லாமல் பிறக்கப் போகும் குழந்தைகளை ஒரு மனதோடு இருவரும் தேவனுடைய வழியில் நடத்துவதும் முடியாத காரியமாகும். பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலர் அந்நியர்களோடு கொண்டிருந்த உறவு தவறான திருமண உறவாக சித்தரித்துக் காட்டப்பட்டிருக்கிறது.

**2. கிறிஸ்தவத் திருமணத்தில் உலகப்பிரமாணமான காரியங்களுக்கு இடம் கொடுக்கலாகாது.**

கிறிஸ்தவத்திருமணம் நடைபெறத் திருமணம் செய்து கொள்ளப்போகிற இருவரும் உண்மைக் கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டும் என்று ஏற்கனவே பார்த்தோம். ஆனால், இப்படி இரு கிறிஸ்தவர்கள் திருமணம் செய்துகொள்வதற்கும் பெருந்தடைகள் ஏற்பட்டுவிடுகின்றன. இவற்றிற்கு நமது கலாச்சாரப் பாரம்பரியப் பின்னணியே காரணமாக அமைந்து விடுகின்றது. பாவத்திலிருந்து மனம்மாறி தேவனை அறிந்து கொண்ட போதும் பலர் தங்களுடைய பழைய சுபாவங்களையும், உலகப்பிரகாரமான எண்ணங்களையும் கைவிட்டுவிடத்தவறிவிடுகின்றனர். இத்தகையை நிலைமையால் பல பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளின் திருமணத்தின்போது கிறிஸ்துவின் போதனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காது உலக காரியங்களுக்கே முதலிடம் அளித்து தங்கள் பிள்ளைகளின் வாழ்க்கையில் குறுக்கிட்டு, அவர்களுடைய நிம்மதிக்கும் தடையாக இருந்துவிடுகின்றனர். உதாரணத்திற்கு, சாதி, குலத் தொடர்புகளை ஆராய்ந்து அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பதும், வேலைத்தகுதிகளை மட்டுமே ஆராய்ந்து பார்ப்பதும், திருமணம் செய்து கொள்ளப் போகிறவர்களின் எண்ணங்களுக்கு இடம் கொடுக்காதிருப்பதும் இந்த இருபதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதிகளிலும் நம்மத்தியில் நடந்து கொண்டிருப்பதை வாசகர்கள் அறிவர். கிறிஸ்தவப்பெற்றோர்களும், போதகர்களும் இவற்றைக்கனவிலும் எண்ணிப்பார்ப்பது பெருந்தவறு. கிறிஸ்தவப்பெற்றோர்கள் கிறிஸ்துவுக்கும் வேதத்திற்கும் மதிப்புக்கொடுத்து தங்கள் பிள்ளைகளின் திருமணவாழ்க்கையின்மூலம் கிறிஸ்து மகிமை பெறும்படிப்பார்த்துக்கொள்ள வேண்டும். கிறிஸ்தவப்பெற்றோர்கள் வேதத்திற்கு முரணாக நடந்து தங்கள் பிள்ளைகளின் திருமணவாழ்க்கைக்குத் தடையாக இருக்கும்போது சபைப்போதகர்கள் அவர்களுக்குத் தகுந்த ஆலோசனைகூறி திருத்த வேண்டும். அத்தோடு சபையின் வாலிபர்களுக்கும், பெண்களுக்கும் தகுந்த போதனையளித்து அவர்களுடைய எதிர்காலத் திருமண வாழ்க்கைக்குத்துணையாக இருத்தல் அவசியம்.

இதுவரை கிறிஸ்தவப் பெற்றோர்கள் எவ்வாறு தங்களுடைய பிள்ளைகளின் திருமண வாழ்க்கைக்குத் தடையாக இருந்துவிடலாம் என்று பார்த்தோம். இனி கிறிஸ்துவை அறியாத பெற்றோர்களைக்கொண்டிருக்கிற கிறிஸ்தவ வாலிபர்களுடைய பிரச்சனைகளையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். இவர்கள் சமுதாயத்தில் பெரும் பிரச்சனைகளைச் சந்திக்கிறார்கள். தாங்கள் விரும்பும் கிறிஸ்தவ ஆண்களையும், கிறிஸ்தவப் பெண்களையும் திருமணம் செய்து கொள்ள முடியாமல் அவதிப்படும் அநேகரை நாம் அடிக்கடி சமுதாயத்தில் சந்திக்கிறோம். கலாச்சாரப்பாதிப்பால் இவர்கள்படும் தொல்லைகள் அநேகம். பெற்றோர் பார்த்துத்திருமணம் செய்து வைக்கும் கலாச்சாரப் பின்னணியைக் கொண்ட சமுதாயத்தில் ஒரு கிறிஸ்தவ வாலிபனையோ அல்லது பெண்ணையோ விரும்பிய ஒரே காரணத்திற்காக பெற்றோராலும், போதகர்களாலும், சபையாலும் வெறுக்கப்பட்ட வாலிபர்களும், பெண்களும் அநேகர். இந்நிலைக்கு முதலாவது காரணம், இந்நூற்றாண்டிலும் நமது சமுதாயத்தில் ஒரு ஆண்மகன் ஒரு பெண்ணிலும், ஒரு பெண் ஆணிலும் அன்பு வைப்பது ஏதொ ஒரு தகாத காரியம்போல் எண்ணப்படுவதால்தான். கிறிஸ்தவர்கள் இத்தகைய எண்ணத்தைக் கொண்டிருப்பது தகாது. இவ்வாறாக ஒரு ஆண் ஒரு பெண்ணில் கொள்ளும் அன்பை கேடான இச்சையாகக் கருதுகிறவர்களும் இருக்கவே செய்கிறார்கள். ஒரு ஆணுக்கு ஒரு பெண்ணிலும், ஒரு பெண்ணுக்கு ஒரு ஆணிலும் இருக்க வேண்டிய உண்மையான அன்பிற்கும், கேடான இச்சைக்கும் வித்தியாசம் தெரியாத சமுதாயத்தை என்னவென்று கூறுவது? இதைக் கிறிஸ்தவப் போதகர்கள் கண்டித்து சபைகளில் போதித்து தமது மக்கள் வேதபூர்வமான எண்ணங்களில் வளர உதவ வேண்டும்.

உண்மையான அன்பில்லாமல் ஒரு ஆண் ஒரு பெண்ணையோ, அல்லது ஒரு பெண் ஒரு ஆணையோ எப்படி திருமணம் செய்து கொள்ள முடியும்? அப்படியே திருமணம் செய்து கொண்டாலும் அது எப்படி உண்மையான திருமணமாக இருக்க முடியும். ஒருவரில் ஒருவர் அன்பில்லாமல் இருவர் திருமணம் செய்து கொள்வது எப்படித் தகும்? இங்கே, நாம் அன்பு என்று எதைக் கூறுகிறோம் என்பதை சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, ஒரு கிறிஸ்தவ ஆண்மகனுக்கு தான் திருமணம் செய்து கொள்ளப் போகிற பெண்ணைப்பிடித்திருக்க வேண்டும். பிடிக்காத ஒருவரை அவர் திருமணம் செய்து கொண்டு குடும்பம் நடத்த முடியாது. இதேபோல் பெண்ணுக்கும் தான் திருமணம் செய்து கொள்ளப் போகிற ஆணைப்பிடித்திருக்க வேண்டும். இருவருக்கும் ஒருவரைப்பற்றி மற்றவருக்கு ஓரளவுக்குத் தெரிந்திருக்க வேண்டும். திருமணம் செய்து கொள்ளப் போகிறவர்கள் மனிதப்பிறவிகளேயன்றி உயிரற்ற ஜடங்களல்ல. பிறருடைய மனத்திருப்திக்காக ஒரு கிறிஸ்தவன் திருமணம் செய்து கொள்ள முடியாது. இத்தகைய அநாகரீகமான செயல்களைத்

"தியாகம்" என்ற பெயரில் பண்டைத் தமிழ் இலக்கியங்களிலும், தமிழ் சினிமாவிலும்தான் பார்க்கலாம். ஆனால், இதற்கும் கிறிஸ்தவத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. கிறிஸ்த திருமணங் கள் கிறிஸ்துவை மகிமைப்படுத்த வேண்டும். அவை கிறிஸ்தவ வேதத்தின் போதனைகளின் அடிப்படையில் அமைய வேண்டும். ஆகவே, சமுதாயத்தின் வரம்புக்குட்பட்டு, வேதபூர்வமாக நடந்து கொள்ளும் பண்புள்ள கிறிஸ்தவர்கள், தாம் திருமணம் செய்து கொள்ள விரும்பும் ஒரு ஆணிலோ, பெண்ணிலோ தூய்மையான அன்பு வைப்பதில் எந்தவிதமான தவறுமில்லை; அது மட்டுமல்ல, அத்தகைய தூய்மையான அன்பு இல்லாமல் ஒரு ஆண் ஒரு பெண்ணையோ அல்லது பெண் ஆணையோ திருமணம் செய்து கொள்வதை எண்ணிப்பார்க்கக் கூடாது. இதைக் கூடாத காரியமாக எண்ணுபவர்கள் தங்களுடைய போக்கை எந்தவிதத்திலும் நியாயப்படுத்த முடியாது

சபையில் அப்படி ஒரு கிறிஸ்தவ வாலிபன் கிறிஸ்தவ வாலிபப் பெண்ணை விரும்பினால் அதை கேலி செய்து, அவர்கள் ஏதோ பெரும் தவறு செய்துவிட்டதுபோல் நடத்திப்புண்படுத் தாது, அவர்களுடைய உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். இப்படி ஒருவர் மேல் ஒருவர் அன்பு வைத்த ஒரே காரணத்துக்காக, அவர்களுக்குத் துணையிருந்து வழிநடத்த வேண்டிய போதகர்களே அவர்களுக்கு எதிரி களாகவும் மாறிவிடுகிறார்கள். இதனால், போதகர் என்ன நினைப்பாரோ அல்லது பெற்றோர்கள் என்ன நினைப்பார்களோ என்று பயந்து எல்லா வற்றையும் மனத்துள் புதைத்து வைத்து வாழ்ந்து கொண்டிருக்கும் கிறிஸ்தவ வாலிபர்களும், பெண்களும் அநேகர். என்னடா, இவர் இப்படிக் கிறிஸ்தவ இளைஞர்களுக்காக வக்காலத்து வாங்குகிறாரே, என்று நினைக்கிறீர்களா? இன்று, இப்படி நம்மத்தியில் நடக்கவில்லை என்று எவராவது கூற முடியுமா? நான் சொல்வதெல் லாம், கிறிஸ்தவர்கள் வேத போதனைகளுக்கு மதிப்புக்கொடுத்து நமது இளைஞர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதுதான். வழிகாட்டி நடத்த வேண்டிய பெற்றோர்களும், போதகர்களும், வழிப்பறிக் கொள்ளையர்கள் போல் நடந்து நமது இளைய சமுதாயத்தைக் கெடுத்துவிடக்கூடா தென்பதுதான். கலச்சாரம் என்ற பெயரில் வேத போதனைகளை நாம் தூக்கி எறிந்து விடக்கூடாது என்றுதான் நான் கூறவருகிறேன்.

ஆகவே, இன்று கிறிஸ்தவ இளைஞர்களுக்குப் பெருந்துணையாக இருந்து வழிகாட்ட வேண்டிய போதகர்கள் அவர்களுடைய அன்பைப்பெற்று அவர்களை முறையாக வழிநடத்தி, அவர்களுடை வாழக்கையில் விளக்கேற்றி வைக்க வேண்டியது அவசியம். நாம் இதுவரை பார்த்த உண்மை களைப் போதித்து சபையாரையும் திருத்த வேண்டியது அவர்களது கடமை.

(வளரும்)

## "வேதபோதனை என்ற பெயரில் உளவியல் போதனை" அளிக்கும் ஜேம்ஸ் டொப்சன் (James Dobson)

**அமெரிக்க நாட்டைச் சேர்ந்த டாக்டர் ஜேம்ஸ் டொப்சனின் "Focus on the Family" வானொலி நிகழ்சிகள், ஒளி நாடாக்கள், பத்திரிகை ஆகியவை இன்று உலகின் பல நாடுகளிலும் பிரபலம் பெற்றுக்காணப்படு கின்றன. இறையியல் கல்லூரிகளில் டொப்சனின் குடும்ப வாழ்க்கை, பிள்ளை வளர்ப்புபற்றிய நூல்கள் பெரிதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. டொப்சனின் போதனைகளில் என்ன தவறு? ஜேம்ஸ் டொப்சன் தனது போதனைகளில் வேதபோதனை என்ற பெயரில் சிக்மன்ட் புரொயிட்டினதும் (Sygmond Froyd), ஏனைய பல உளவியல் வல்லுனர்களினதும் போதனைகளைத் திரித்துக் கொடுத்து வருகிறார். குழந்தைகளின் இயற்கைத் தன்மை, நடத்தை ஆகியவற்றை அவர் உளவியலின் அடிப்படையில் ஆராய்ந்து விளக்கமளிக்கிறார். உதாரணமாக, டொப்சனின் போதனையின்படி, ஒரு பிள்ளை தவறு செய்வதற்கு அப்பிள்ளை பாவியாக இருப்பது காரணமல்ல, அப்பிள்ளை தவறாக ஏற்படுத்திக்கொண்ட பழக்க வழக்கங்களே அதற்குக் காரணம். ஆகவே, அப்பிள்ளை நல்ல முறையில் வளர வேண்டுமானால், அதற்கு நாம் வெற்றிதரக்கூடிய ஒழுங்கு முறைகளைப் பயன்படுத்த வேண்டும். சரியான வழிமுறைகள், தகுந்த முறையில் பயன்படுத்தப்பட்டால் வெற்றி நிச்சயம் என்று கூறும் டொப்சன் அவ்வழிமுறைகளாக, உளவியல்பூர்வமான ஆலோசனைகளைத் தருகிறார். டொப்சனைப் பொறுத்தவரையில் நல்ல பிள்ளை வளர்ப்பு என்பது நல்லபடி பயன்படுத்தப்பட வேண்டிய ஒழுங்கு முறைகளிலேயே தங்கியுள்ளது. ஆகவே, இவரைப்பொறுத்தவரையில் வெற்றிக்கு அடிப்படை பயன்படுத்தப்பட வேண்டிய வழி முறைகளே. ஆனால், வேதம் சரியான பிள்ளை வளர்ப்பு அதற்காக நாம் பயன்படுத்த வேண்டிய ஒழுங்கு முறைகளில் தங்கியிருப்பதாகப் போதிக்கவில்லை. சரியான ஒழுங்குமுறைகளைப் பயன் படுத்துவதால் மட்டும் பிள்ளைகள் நல்ல முறையில் வளர்ந்து விடுவதில்லை. தேவ விசுவாசமே நல்ல பிள்ளைகளை வளர்க்க உதவுகிறது. எந்த ஒழுங்குமுறையும் விசுவாசத்துடன் பயன்படுத்தப்பட வேண்டும். தேவ விசுவாசத்துடனும், ஜெபத்துடனும் நடைமுறைப்படுத்தப்படாத வழிமுறைகள் என்றும் பயன் தருவதில்லை. இவற்றை டொப்சனின் போதனைகளில் பார்க்க முடிவதில்லை. டொப்சனின் போதனைகளின் ஆபத்தைச் சுட்டிக்காட்டி மார்டின் & டியட்ரி பொப்கன் (Martin & Deidre Bobgan) என்போர் "James Dobson's Gospel of Self Esteem and Psychology" என்ற நூலை சமீபத்தில் வெளியிட்டுள்ளனர்.**

4

# 1 கொரி. 12–14

## (ஆவிக்குரிய வரங்களைப் பற்றிய விளக்கம்)

பண்ணிரண்டாவது அதிகாரத்தை விளக்கமாகப்படித்து வரும் நாம் இதுவரை அது போதிக்கும் இரண்டு உண்மைகளைப் பார்த்தோம்.

**1. தேவனே வரங்களைக் கொடுப்பவர் (4-6)**
**2. வரங்கள் அனைவரது நன்மைக்காகவும் கொடுக்கப்படுகின்றன (7)**

வரங்கள் எல்லோருடைய (சபையினுடைய) நன்மைக்காகவும் கொடுக்கப்படுகின்றன என்று 12:7 இல் கூறும் பவுல் 8 முதல் 11 வரையிலான வசனங்களில் சில வரங்களை உதாரணத்திற்கு மேற்கோள் காட்டுகிறார். 8 ம் வசனத்தில் "எப்படி யெனில்" என்று பவுல் கூறுவதைப் பார்க்கிறோம். அதாவது, வரங்கள் சபை மக்களுடைய நன்மைக் காகக்கொடுக்கப்படுகின்றன என்ற உண்மையை நான் இப்போது விளக்கப்போகிறேன் என்பதையே பவுல் இங்கு கூறுகிறார். அவ்வாறு கூறியபின் ஆவிக்குரிய வரங்களில் சிலவற்றை அவர் உதா ரணத்திற்கு எடுத்துக்கொள்வதைக் கவனிக்கி றோம். இவ்வரங்களை பவுல் உதாரணத்திற்கு மட்டுமே எடுத்துக்கொள்கிறாரே தவிர இவ்வரங் களின் தன்மை என்ன? அவற்றை விசுவாசிகள் சபைகளில் எந்தவிதத்தில் பயன்படுத்த வேண்டும்? என்று விளக்குவதோ, அல்லது ஆவிக்குரிய வரங் கள் அனைத்தையும் நாம் அறிந்து கொள்ளும் விதமாக பட்டியலிட்டுக் கொடுப்பதோ பவுலின் நோக்கமல்ல. இதை இங்கே நான் வலியுறுத்திக்கூற விரும்புகிறேன். இதற்கு சில முக்கியமான காரணங்களுள்ளன.

முதலில், புதிய ஏற்பாட்டில் வரங்களைப்பற்றி நாம் இப்பகுதியில் மட்டும் வாசிப்பதில்லை. 28-30 வரையிலுள்ள வசனங்களிலும் ஏனைய வரங் களைப்பற்றி வாசிக்கிறோம். ரோமர் 12:6-8; எபே சியர் 4:11 ஆகிய பகுதிகளிலும் பவுல் வரங் களைப்பற்றி எழுதியுள்ளார். இப்பகுதிகளனைத்தி லும் எல்லா வரங்களையும் தொகுத்து மொத்த மாகப் பட்டியலிட்டுக்கொடுப்பது பவுலின் நோக்க மாக இருக்கவில்லை. அதுமட்டுமல்லாமல் இம் மூன்று வேதப் பகுதிகளும் ஒரேவிதமான வரங்களைப்பற்றிப் பேசுவதில்லை. இதிலிருந்து பவுல் இவ்வரங்களை உதாரணத்திற்காகவே மேற்கோள் காட்டி விளக்குகிறார் என்பதை அறிந்து கொள்கிறோம்.

அடுத்ததாக, இன்று கிறிஸ்தவ உலகில் ஒருபகுதி யினர் பவுல் கூறுவதைப்புரிந்து கொள்ளாமல், இப்பகுதியில் உதாரணத்திற்காக பவுல் எடுத்துக் காட்டும் வரங்களைக் கர்த்தர் அனைத்துக் கிறிஸ் தவர்களுக்கும் கொடுக்கிறார் என்றும், அவற்றை ஒவ்வொரு கிறிஸ்தவரும் கர்த்தரிடம் மன்றாடிக் கேட்டுப்பெற்று ஆசீர்வாதமடைய வேண்டும் என்றும் போதித்து வருகிறார்கள். இப்போதனை ஏன் தவறானது என்று பார்ப்போம்.

1. முதலில், இவ்வாறாகப்போதிப்பவர்கள் இப்பகுதி யில் கொடுக்கப்பட்டுள்ள போதனையை சரிவரப் படித்து விளங்கிக்கொள்ளவில்லை. இலக்கணமில் லாத மொழி உலகத்தில் இருக்கமுடியாது. இலக் கண பூர்வமாக பவுலின் எழுத்துநடையை முறை யாகப் படித்துப்பார்த்தால் இங்கே பவுல் உதாரண த்திற்காக சில வரங்களை மேற்கோளாக சுட்டிக் காட்டுவதைப் புரிந்து கொள்ளலாம்.

2. இவ்வரங்களை நாம் ஆவியானவரிடம் கேட்டுப் பெற்றுப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திற்காக பவுல் இப்பகுதியை எழுதியிருந் தால், இவ்வரங்களின் தன்மை என்ன என்றும் அவற்றை நாம் எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும் என்பதையும் கூடவே பவுல் எழுதியிருப்பார். ஏனெனில், இவ்வேதப்பகுதியை பவுல் மூலம் நமக் களித்துள்ளவர் ஆவியானவரே. நாம்தான் சில வேளைகளில் எழுதும் காரியங்களைத் தெளிவில் லாமல் எழுதிவிடுவோமே தவிர ஆவியானவர் ஒருபோதும் தெளிவில்லாமல் எதையும் எழுத்தில் தரவில்லை. உதாரணத்திற்கு, ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனம் (8) என்றால் என்ன? என்றும், ஆவியினாலே அறிவை உணர்த்

*தும் வசனம் (8) என்றால் என்ன? என்றும் எவராலும் வேதத்தின் அடிப்படையில் விளக்கம் கொடுக்க முடியுமா? அதாவது, இப்பகுதியில் இருந்தோ அல்லது வேதத்தின் வேறு பகுதிகளில் இருந்தோ இதற்கு விளக்கம் கொடுக்க முடியுமா? நிச்சயமாக ஒருவராலும் முடியாது. ஏன்? வேதத்தின் எப்பகுதியிலும் இவ் வரங்கள் இத்தகைய தன்மையுள்ளவை என்றோ, அல்லது இவற்றை இப்படித்தான் பயன்படுத்த வேண்டும் என்றோ விளக்கம் கொடுக்கப்படவில்லை. இவற்றை நாம் இன்றும் பெற்றுக் கொள்ள முடியும் என்றும், சபைகளில் பயன்படுத்த வேண்டும் என்றும் கூறுபவர்கள் தங்கள் போதனைகளுக்கு ஒரு போதும் வேதத்தில் இருந்து பதில் கொடுப்பதில்லை என்பதை நாம் உணர வேண்டும். அவர்கள் ஆவியானவர் தங்களுக்கு மட்டும் தனிப்பட்டவிதத்தில் இதனை உணர்த்தினார் என்று உளரிக்கொட்டிக் கொண்டிருப்பதை மட்டுமே நாம் பார்க்கிறோம். அதை அவர்களால் எந்தவிதத்திலும் நிரூபிக்க முடியாது. அத்தோடு, ஆவியானவர் தாம் ஏற்கனவே நமக்கு எழுத்தில் கொடுத்துள்ள வேதத்திற்கு முரணாக ஒரு தனி நபருக்கு ஒரு சத்தியத்தை வெளிப்படுத்தினார் என்று கூறுவது ஆவியானவரை அவமதிக்கும் செயலாகும். இவற்றின் மூலம் நாம் எதைப்புரிந்து கொள்கிறோம்? அதாவது, பவுல் அன்று சபைகளில் காணப்பட்ட இவ்வரங்களை, தான் இங்கு போதிக்கும் உண்மையை வலியுறுத்துவதற்காக உதாரணமாகப் பயன்படுத்துவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டிருந்தாரேயல்லாமல் இவ் வரங்களை நாம் இப்படித்தான் பயன்படுத்த வேண்டும் என்று போதிப்பதற்காக அல்ல என்ற உண்மையைத்தான்.*

*8 முதல் 10 வரையிலான பகுதிகளில் இதுவரை நாம் பார்த்த இருவரங்களைப்பற்றி மட்டுமல்லாமல் அந்நியபாஷை, தீர்க்கதரிசனம் உரைத்தல் போன்ற ஏனைய வரங்கள்பற்றியும் பேசப்படுவதை நாம் அறிவோம். இவற்றில் மூன்றைப்பற்றி (தீர்க்கதரிசனம் உரைத்தல், அந்நியபாஷை பேசுதல், பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல்) பவுல் 14 ஆம் அதிகாரத்தில் மேலும் விளக்குகிறார். அவ்வதிகாரத்திற்கு வரும்போது நாம் அவற்றை மேலும் விளக்கமாக ஆராய்வோம்.*

**3. வரங்களை ஆவியானவர் தனது சித்தத்தின்படி பகிர்ந்து கொடுக்கிறார்.**

*11 ஆம் வசனம் எல்லா வரங்களையும் ஆவியானவர் தனது சித்தத்தின்படி ஒவ்வொருவருக்கும் பகிர்ந்து கொடுக்கிறார் என்று போதிக்கின்றது. 4 முதல் 6 வரையிலான வசனங்களில் இவ்வரங்களைக் கொடுப்பவர் தேவனே என்று ஏற்கனவே பார்த்தோம். இங்கே இவ்வரங்களை அளிப்பவர் ஆவியானவர் என்று கூறப்பட்டிருப்பது அவ்வசனங்களுக்கு எதிரான போதனையல்ல. பிதாவின் சொற்படி ஆவியானவர் இவ்வரங்களை ஒவ்வொருவருக்கும் பகிர்ந்து அளிக்கிறார்.*

*வரங்களைக் கொண்டுள்ளவர்கள் தங்களுடைய சுய விருப்பத்தின்படி அவற்றைப் பெற்றுக்கொள்வதில்லை. இன்ன வரம் வேண்டும் என்றும் நாம் தேவனிடம் கேட்க முடியாது. வரங்களை ஆவியானவரே தனது சித்தத்தின்படி ஒவ்வொருவருக்கும் வழங்குகிறார். 1 பேதுரு 4:10 இல் பேதுருவும் இதையே வலியுறுத்துகிறார். அங்கே “அவனவன் பெற்ற வரத்தின்படியே” என்று எழுதப்பட்டிருக்கிறது. இதற்கு, வரங்களை நாம் ஆவியானவரிடம் இருந்து பெற்றுக்கொள்கிறோம் என்று பொருள். வரங்களை அளிக்கும் சர்வ இறை ஆண்மையுள்ளவரான ஆவியானவர் சபையின் நன்மைக்காக யாருக்கு எவ்வரத்தை அளிப்பது என்பதைத் தானே தீர்மானம் செய்கிறார். அநேகர் இன்று இதைப் புரிந்து கொள்ளாமல் தாம் விரும்புகிற வரத்தைக் கேட்டு, ஜெபம் செய்து காலத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வேதப் பகுதி அத்தவறைச்சுட்டிக் காட்டுகிறது.*

*அதுமட்டுமல்லாமல், ஆவியானவர் வரங்களை சபையின் நன்மையையும், வளர்ச்சியையும் கருத்தில் கொண்டே ஒவ்வொருவருக்கும் கொடுப்பதால் விசுவாசிகள் தங்களுடைய சுயநன்மைக்காகவும், பெருமைக்காகவும் அவற்றை நாடி அலைவது தவறு.*

*ஆகவே, இப்பகுதியில் நாம் இதுவரை பார்த்த வசனங்கள் (12:4-11) சபை ஒற்றுமையைப்பற்றிப் போதித்து, அச்சபையில் எந்தவகையில் பல்வேறு வேறுபாடுகளுக்கு மத்தியில் அவ்வொற்றுமை நிலவுகிறது என்பதை விளக்குகிறது. கொரிந்து சபை மக்கள் வரங்களின் தன்மையையும், அவற்றின் பயனையும் புரிந்து கொள்ளாமல் சபையின் ஒற்றுமைக்கு தீங்கு விளைவித்தனர். அவர்களைக் கண்டித்துத் திருத்தும் நோக்கத்துடனேயே பவுல் இவ்வுண்மைகளைப் போதிக்கிறார்.*

*(வளரும்)*

## வாசகர்கள் கவனத்திற்கு

உங்கள் முகவரி மாறும்போது தயவு செய்து சரியான முகவரியை எமக்கு எழுதி அனுப்பத் தவறாதீர்கள். தேவ ஊழியத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு நமது வெளியீடுகள் பயன் தருமானால் எமக்கு எழுதலாம். எழுதும்போது நீங்கள் எத்தகைய ஊழியத்தில் ஈடுபட்டுள்ளீர்கள் என்பதையும் எழுத மறவாதீர்கள். - ஆசிரியர்

# எண்ணங்கள் !

திருமறைத்தீபம் இதழை சக போதகர் ஒருவரிடமிருந்து பெற்று வாசித்தேன். என் உள்ளத்தைக்கவர்ந்துவிட்டது. தயவு செய்து பத்திரிகையை நேரடியாக எனக்கு அனுப்பி வையுங்கள்.

*யோசுவா சண்முகம், கோலாலம்பூர், மலேசியா*

ஒரு நண்பர் மூலமாக உங்களுடைய பத்திரிகை கிடைத்தது. ஆனால், தொடர்ந்து கிடைப்பதில்லை. நான் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளரவும், சத்தியத்தில் நிலைத்து நிற்கவும் இப்பத்திரிகை உதவும் என்று விசுவாசிக்கிறேன். தொடர்ந்து பெற்றுக்கொள்ள ஆவலாயுள்ளேன். சீர்திருத்தவாதிகளின் நூல்களும், வேதவசனத்திற்கு ஒத்த நூல்கள் இருந்தாலும் அனுப்பி உதவுங்கள்.

*கே. ராமமூர்த்தி, நோர்வே*

பத்திரிகை ஒருவரிடமிருந்து கிடைக்கப்பெற்று வாசித்தேன். மிக அருமையாக இருந்தது. நான் ஒரு சிறு சபையின் போதகன். எனது ஊழியத்திற்கு பத்திரிகை மிகவும் பிரயோஜனமாக இருக்கிறது. வேதாகமக் கல்லூரிபோல் உபதேச சட்டதிட்டங்களையும், நல்ல செய்திகளையும் தாங்கி வருகிறது. எனக்கும் இதனை அனுப்பி உதவுங்கள்.

*ஜே. அருன் செல்வன், தர்மபுரி மாவட்டம், தமிழ்நாடு*

ஐயா! இவ்வளவு காலமாக திருமறைத்தீபத்தின் மூலம் பயனடையும் வாசகர்களில் நானும் ஒருவன். ஆவிக்குரிய சபை ஒன்றில் முழு நேர ஊழியனாக பணிபுரியும் நான் சஞ்சிகையில் வெளியாகும் இறையியல் பகுதி, வேதவிளக்க பகுதி, கட்டுரை பகுதி போன்றவற்றில் இருந்து அநேக காரியங்களை கற்றுக்கொண்டு அதன்படி நடக்கவும் ஊழியம் செய்யவும் பெரிதும் துணையாக இருக்கின்றது. ஏப்பிரல்–ஜூன் மாத சஞ்சிகையில் இறையியல் பகுதியில் வெளியாகி இருந்த விசுவாச அறிக்கை என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டிருந்த செய்தியின் மூலம் பரிசுத்த ஆவியானவர் வேதத்தின் மூலமே நம்மோடு பேசுகிறார், வழிநடத்துகிறார், தெளிவை உண்டு பண்ணுகிறார் என்ற சத்தியத்தை அறிந்து கொண்டேன். அதற்காக என் தேவனைத் துதிக்கிறேன். வேதாகமக் கல்லூரிக்கு சென்று படிக்காத எனக்கு இந்த திருமறைத்தீபம் மூலம் இறையியல் அறிவைப் பெற்றுக் கொள்ள தேவன் கொடுத்திருக்கும் இந்த சந்தர்ப்பம் தொடர்ந்து எனக்குக் கிடைக்க கர்த்தர் துணைபுரிவாராக. இன்னும் ஆக்கபூர்வமான வேத சத்தியங்களை துணிச்சலுடன் உலகுக்கு எடுத்துச்சொல்ல கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

*சகோ. ஆர். பாக்கியராஜா, ஸ்ரீ லங்கா*

அநேக தவறான போதனைகள் மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் இந்நாட்களில் தங்களின் திருமறைத்தீபம் இதழ் சத்தியத்தை சத்தியமாய்ப் புகட்டி இருளிலிருக்கும் கிறிஸ்தவர்களுக்கும், ஊழியர்களுக்கும் வெளிச்சம் காட்டும் தீபமாக இருக்கின்றது. நானும் அநேக விடயங்களைக் கற்றுக்கொண்டேன். மேலும் கற்றுக் கொள்ள விரும்புகிறேன். பத்திரிகையை நிறுத்தாது தொடர்ந்து அனுப்பி வையுங்கள்.

*என். லலித் ராம் குமார், ஸ்ரீ லங்கா*

## உள்ளே . !

1. குடும்பம் ஒரு ஆலயம்
2. குடும்ப ஆராதனை
3. கிறிஸ்தவக் கோட்பாடுகள்
4. வில்லியம் கேரி
5. திரித்துவம்
6. சீர்திருத்த விசுவாசம்
7. சிறந்த பிள்ளை வளர்ப்பு
8. 1 கொரி. 12-14
9. எண்ணங்கள் !